பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஐப்பசி 02 வெள்ளிக்கிழமை (19.10.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 323

## ஓமந்தை சோதனை நிலையத்தினூடான போக்குவரத்து இன்று வழமைக்கு

### இரு தரப்புகளும் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கின

வவுனியா, ஒக். 19

ஓமந்தைச் சோதனை நிலையத்தில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகளின் பிரசன்னத்துக்கு இருதரப்பினரும் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கியதையடுத்து, மீண்டும் அப்பாதை ஊடான போக்குவரத்து இன்று வழமைக்குத் திரும்புகிறது.

நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளின் சோதனை நிலையம் அமைந்துள்ள புளியங்குளம் பகுதி மீது படையினர் ஷெல் தாக்குதலை நடத்தினர். இதனால் பொது மக்கள் பாதுகாப்புத் தேடி ஓடினர்.

அதன் காரணமாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள் நேற்று ஓமந்தை சோதனை நிலையத்துக்கு பணிக்குவர

(08ஆம் பக்கம் பார்க்க)

### அடுத்த மாதம் ஆறாம் திகதியன்று

## ஈழத் தமிழர்களை காப்பாற்றக் கோரி டில்லி நாடாளுமன்று முன் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஒக். 19

ஈழத்தமிழர்களை காப்பாற்ற வேண்டும் என்று மத்திய அரசைக் கோரி புதுடில்லியில் உள்ள நாடாளுமன்றம் மற்றும் பிரதமர் இல்லம் ஆகியவற்றுக்கு முன்பாக எதிர்வரும் 6ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு புதிய தமிழகம் கட்சி ஏற்பாடு செய்துள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஏனைய கட்சிகளையும் பொது மக்களையும் கலந்துகொள்ளுமாறு கட்சியின் நிறுவுநரும் தலைவருமான கே. கிருஸ்ணசாமி கேட்டுள்ளார்.

இலங்கையில் ஈழத்தமிழர்கள் அரசினால் படுகொலை செய்யப்படுவதை மத்திய அரசும் மாநில அரசும் தடுத்து நிறுத்தவேண்டும்

(08ஆம் பக்கம் பார்க்க)

# அகதிகள் படகு மீது கடற்படை சூடு!

# மூவர் பலி!! ஒருவரைக் காணவில்லை!!!

## பேசாலைக் கடலில் அதிகாலை அனர்த்தம்

மன்னார், ஒக்ரோபர் 19

**மன்னாரில் இருந்து தமிழகம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த அகதிகளின் படகு மீது, பேசாலைக் கடலில் வைத்து நேற்று அதிகாலை 4.30 மணியளவில் கடற்படையினர் நடத்திய தாக்குதலில் - சூட்டுச் சம்பவத்தில் - மூன்று பொதுமக்கள் பலியாகினர். ஒருவர் காணாமற்போனார். அவர்கள் நால்வரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். தாயாரும் சிறுவர்களான அவரது இரண்டு பிள்ளைகளும் படுகாயமுற்றனர்.**

மன்னாருக்கு வடக்கே 58 கிலோ மீற்றர் தூரத்தில், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான நாச்சிக்குடா, இரணைமாதா நகரில் இருந்து தமிழகம் நோக்கிப் படகில் சென்றுகொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழுபேர் சென்ற படகு மீதே கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இத்தாக்குதலில் கொல்லப்பட்ட செபமாலை ஜேசுதாசன் (வயது 55), மேரி மிலக்ஷினி (வயது 15), டிலக்ஷன் (வயது 11) ஆகியோரின் சடலங்கள் மன்னார் ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தில் காயமடைந்த ஜிம் நெக்

(08ஆம் பக்கம் பார்க்க)

## புளியங்குளம் நோக்கி ஷெல் வீச்சு

கொழும்பு, ஒக்.19

வவுனியா புளியங்குளம் பகுதி நோக்கி படையினர் ஷெல்தாக்குதலினை மேற்கொண்டனர் என இணையத்தளத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

புளியங்குளம் சோதனைச்சாவடியை நோக்கி நேற்றுமுன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் பயணிகள் பயணித்துக் கொண்டிருந்தபோது படையினர் ஷெல் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

படையினரின் இத்தாக்குதலினால் மக்கள் அச்சமடைந்து சிதறி ஓடினர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## பேசாலைச் சம்பவத்தில் உயிரிழந்தோரின் மரண விசாரணை கொழும்பு மேல் நீதிமன்றில்

### அவசரகாலச் சட்ட விசேட விதிகளின் பிரகாரம்

மன்னார், ஒக். 19

தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்றவேளை பேசாலைக் கடற்பரப்பில் கடற்படையினரின் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தவர்களின் மரண விசாரணை கொழும்பு மேல் நீதிமன்றத்திலேயே இடம்பெறும்.

வழமையாக நீதிமன்ற நீதிவானால் நடத்தப்படும் மரண விசாரணைக்குப் பதிலாக, அவசரகாலச் சட்ட விசேட விதிகளின் கீழ் இந்த மரணங்கள் குறித்த விசாரணை மேல் நீதிமன்றத்தில் இடம்பெறுவுள்ளது.

இந்த ஏற்பாட்டின் பிரகாரம் -

மன்னார் நீதிமன்ற நீதிவான் இன்று காலை வைத்தியசாலையில் சடலங்களைப் பார்வையிட்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிடுவார்.

பொலிஸ்மா அதிபரால் நியமிக்கப்படும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு விசாரணை நடத்துவார். பின்னர் சம்பந்தப்பட்டவர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்வார்.

அந்த வாக்குமூலங்களையும், மன்னார் ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி சமர்ப்பிக்கும் பிரேதபரிசோதனை அறிக்கையையும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பார்.

அந்த நீதிமன்றத்திலேயே மரண விசாரணைகள் இடம்பெறும். (அ-1)

## பட்டப்பகலில் வெள்ளை வானில் வந்து குடும்பப் பெண்ணைக் கடத்திச் சென்றனர்!

### பிள்ளைகள் இரண்டும் அனாதரவாகினர்!!

யாழ்ப்பாணம், ஒக். 19

திருநெல்வேலி, தாழையடி வீதியில் நேற்றுமுன்தினம் காலை 8.30 மணியளவில் - பட்டப் பகலில் வெள்ளை வானில் சென்ற ஆயுததாரிகளால் குடும்பப் பெண் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் இது குறித்து நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது

திருமதி எஸ்.ஜெபநேசன் என்ற குடும்பப் பெண்ணே கடத்தப்பட்டுள்ளார். 'ஹலோ றஸ்ட்' கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தில் பணிபுரியும் அவரது கணவர் உயிர் அச்சுறுத்தல் காரணமாக கடந்த ஓகஸ்ட் மாதம் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தஞ்சம் அடைந்து தற்சமயம் நீதிமன்றப் பாதுகாப்பில் உள்ளார்.

அதன்பின் பிரஸ்தாப பெண் தனது மகளை கல்வி பயில்வதற்காக யாழ்ப்பாணத்தில் விடுதி ஒன்றில் சேர்த்து விட்டு 4 வயது நிரம்பிய மகனுடன் வவுனியாவில் வசித்து

(08ஆம் பக்கம் பார்க்க)

## பெரிய தம்பனையில் மோதல் பத்துப்படையினர் காயம்

மன்னார் பெரிய தம்பனையில் நேற்றுக் காலை கடும் மோதல் நிகழ்ந்தது என இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

பெரியதம்பனை முன்னரங்கில் உள்ள இராணுவ நிலைகளை நோக்கித் தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் எனவும் அதனையடுத்தே அங்கு கடும் மோதல் நிகழ்ந்தது எனவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இந்த மோதலில் 10 இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர் என்றும் அவர் கூறினார். (சி)

## பயங்கரவாதத்தை தோற்கடித்த மகுடமே கிழக்கில் அரசு பெற்றெடுத்த வெற்றியாகும்

### கொழும்பு மாநாட்டில் வெளிவிவகார அமைச்சர் பெருமிதம்

கொழும்பு, ஒக்.19

''சரியான அரசியல் தீர்மானத்தின் ஊடாக பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட முடியும் என்பதற்கு கிழக்கு கைப்பற்றப்பட்டமை சிறந்த உதாரணமாகும். தொடர்ந்து பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட இலங்கை அரசு உறுதியாகச் செயற்படும்''

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான சர்வதேச மாநாட்டை நேற்றுத் தொடக்கிவைத்து உரையாற்றுகையில் கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பயங்கரவாதம் என்பது ஒரு நாட்டுக்கு எவ்வளவு பெரிய அழிவுகளை ஏற்படுத்தக் கூடியது என்பதை நாம் அனுபவரீதியாகக் கண்டிருக்கின்றோம்.

பொருள்சேதம், உயிர்ச்சேதம் என பல தரப்பட்ட அழிவுகளை நாம் எதிர்கொண்டிருக்கின்றோம்.

இந்தப் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட நாம் மூன்று தசாப்தகாலமாகப் போராடி வருகிறோம். இப்போது அந்தப் போராட்டத்தில் வெற்றியும் கண்டுள்ளோம்.

முதற்கட்டமாக புலிகளின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த கிழக்கை அரசு மீட்டெடுத்துள்ளது. பயங்கரவாதம் உரிய அரசியல் தீர்மானத்தின் மூலம் ஒழித்துக்கட்ட முடியும் என்பதற்கு கிழக்கை மீட்ட சம்பவம் நல்லதொரு உதாரணமாக அமைகின்றது.

தற்போது இலங்கை அரசு கிழக்கில் பாரிய அபிவிருத்திநடவடிக்கைகளை மேற்கொண்டு

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை

**கணனிப் போதனாசிரியர் தேவை**

M.S.Office, Desk Top Publishing, Computerized Accounting
ஆகிய பகுதிகளில் விரிவுரை, செய்முறை
பயிற்சிகளை வழங்கக்கூடிய
ஆசிரியர் தேவை

**30.10.2007 இற்கு முன்னதாக கல்வி அனுபவ சான்றிதழ் பிரதிகளுடன் விண்ணப்பிக்கவும்.**

வீரசிங்கம் மண்டப கட்டடத் தொகுதி,
2 ஆம் மாடி, இல.12, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம் (சி/54039)

செயலாளர்,
யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபை.


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் சரண் மடியில்
12★02★1962

ஈழத்துச் சிதம்பர நடேசனின் திருப்பாதக் கமலங்களில்
10★10★2005

### அமரர் பாலசிங்கம் நடனகுமார்

திதி:19.10.2007

எங்கள் வீட்டின் விளக்கே! ஒளி தந்து நின்றவனே!
புன்னகையைச் சிந்தி எமைப் பூரிக்க வைத்தவனே!
வாணி விழாப் பூசை நாள் வாடி உமை நாம் நினைக்க
நீ.... ஓடி மறைந்து இரண்டாண்டும் ஆனதுவேன்?
தெய்வமாய் எம் வீட்டில் திருவுடனே வீற்றிருந்தாய்...
இன்று திருக்கைலாயம் சென்று தெய்வத்துள் சங்கமித்தாய்
உன் ஆத்மா இறைவனுடன் உடனுறைய வேண்டுகிறோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

உங்கள் பிரிவினால் துயருறும்:
பெற்றோர், சகோதரர்கள்,
மைத்துனர்கள், மைத்துனி,
பெறாமகன், மருமக்கள்.

"துவாரகா",
கதிர்காமசுவாமி கோவிலடி,
காரைநகர். (67192)

## மரண அறிவித்தல்கள்

### முருகேசு பொன்னையா (ஆச்சாரியார்)



புங்குடுதீவு, 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிட மாகவும், 226, நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு பொன்னையா நேற்று (18.10.2007) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற முருகேசு-நாகம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற ஏரம்பு-செல்லமுத்து தம்பதியரின் மருமகனும், லோகேஸ்வரி, கிருபாகரி ஆகியோரின் தந்தையும், குகதாசலிங்கம், பரமேஸ்வரன் ஆகியோரின் மாமனாரும், பிரசாந், தச்சன், கனிஸ், நிருஷா, சிந்து, கஜன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற தர்ம லிங்கத்தின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, முத்தம்மா மற்றும் செல்லம்மா காலம் சென்றவர்களான கதிரேசு, ஏகாம்பரம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2007) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக் கொள்ளவும்.

226,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(சி/54040)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### நல்லதம்பி பூரணம்

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லதம்பி பூரணம் நேற்று (18.10.2007) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பியின் மனைவியும், குணரத்தினம் தர்மசக்தி அம்மா (இராசாத்தி ரீச்சர்) அவர்களின் அருமைத் தாயாரும், சிறிரங்கன்(அளவெட்டி), சிறிதரன்(வத்தளை), சிறிக்காந்தன்(கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கிருசாந்த்(வத்தளை), மதுசாந்த்(கனடா), அபர்ணா(கனடா) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று (19.10.2007) வெள்ளிக்கிழமை 12 மணியளவில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

மாவிலங்கை,
அளவெட்டி. தொ.பே: 0776068602 (67187)

தகவல்
குடும்பத்தினர்

### சோமசுந்தரம் கந்தையா



வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் சரவணை மேற்கை வசிப்பிடமாவும் தற்போது 268/5, நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் கந்தையா நேற்று (18.10.2007) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் - இளையப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லப்பா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் பாசமிகு கணவரும், பவானிதேவி (ஆசிரியை, யா/நாவந்துறை றோ.க வித்தியாலயம்), காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் பாமினி (பிரான்ஸ்), கெளரி (பிரான்ஸ்), நந்தினி (பிரான்ஸ்), நளாயினி (பிரான்ஸ்), ஜீவகுமார் (லண்டன்), ராஜ்குமார் (பிரான்ஸ்), சிவாஜினி, நிறஞ்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாபரநாதன் (H.N.T), தனலட்சுமி, இராஜேஸ்வரன் (பிரான்ஸ்), தயாபரநாதன் (பிரான்ஸ்), சிவகுமாரன் (பிரான்ஸ்), பரராஜசிங்கம் (பிரான்ஸ்), சகிலா (லண்டன்), உஷா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், ஹம்சா, நிக்கோலா, தயானிஷன், யதுர்ஷனா, கீர்த்திகா, தர்ஷனா, ஸ்ரீவக்ஷன், மதுரா, சரவணன், பிரதீப், நித்தியா, லெக்ஷியா, லேயா, அஞ்சலா, சதுர்ஷன், ஜெனுசன், சானுஜன், விதுஷன், வினோஜன், பிரணவன் ஆகியோரின் அன்பு பேரனும், செல்லம்மா, கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகராசா, தம்பிராசா, சண்பகாவதி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

தகவல்:
க.சரஸ்வதி-(மனைவி),
சி.தயாபரநாதன் (மருமகன்)

268/5, நாவலர் வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 7994

# மாணவனை வாகனத்தால் கொன்ற சாரதியை நஷ்டஈடு வழங்கத் தீர்ப்பு

வலி.வடக்கு, ஒக். 19

பாடசாலை மாணவனை வாகனத்தால் மோதிக் கொலை செய்ததாக சாரதி மீது தொடரப்பட்ட வழக்கில், மாணவனின் பெற்றோருக்கு நஷ்டஈடாக ஒரு லட்சம் ரூபா வழங்குமாறு மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் தீர்ப்பளித்தார்.

சங்கானை மேற்கு, பல்லசுட்டியைச் சேர்ந்த இராமேஸ்வரன் ஜதீஸ்வரன் (வயது 11) என்ற மாணவனை வானால் மோதிக் கொலை செய்ததாக, குறிப்பிட்ட வானின் சாரதியான ஆனைக்கோட்டையைச் சேர்ந்த பொன்னம்பலம் விஜயசிங்கம் என்பவருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மல்லாகம் நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் கடந்த ஒரு வருடகாலமாக நடைபெற்ற இந்த வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வாகனத்தை வேகமாக செலுத்தி மாணவனின் இறப்புக்குக் காரணமாக இருந்தமைக்காக 5 வருடங்கள் ஒத்தி வைக்கப்பட்ட ஒரு வருட கடுழியச் சிறைத் தண்டனையும் வேறு 3 குற்றச்சாட்டுகளுக்கு தலா ஆயிரம் ரூபா தண்டமும் எதிரியான சாரதிக்கு நீதிவானால் விதிக்கப்பட்டது. (அ-202-86)

## சேவை நயப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 19

பெரியபுலம் மகாவித்தியாலய அதிபராகப் பணியாற்றி ஓய்வுபெற்றுச்செல்லும் தி. கிருஷ்ணகுமாருக்கு சேவை நயப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலயத்தின் கனகசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலயத்தின் புதிய அதிபர் சி. இராமலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி. குணசேகரம் வாழ்த்துரை வழங்குவார்.

வித்தியாலயத்தின் மேலதிக அதிபர் ஏ. அருள்தாசன், ஆசிரியை திருமதி வீ. ரவீந்திரன், இலங்கை வங்கி செயற்பாட்டு முகாமையாளர் ந. சச்சிதானந்தம், அபிவிருத்திச் சங்க உறுப்பினர் பொ. சோதிலிங்கம் ஆகியோர் பாராட்டுரைகளை வழங்குவர்.

விழாவில் சிறப்பு மலரும் வெளியிடப் படும். (1-203)

## வடமராட்சி வலய உதைபந்தாட்டப் போட்டி

உடுப்பிட்டி, ஒக். 19

வடமராட்சி வலயப் பாடசாலைகளிடையே நடைபெற்றுவரும் வலயமட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

16 வயதுப் பிரிவு:
காலை - 8 மணி

- அல்வாய் வடக்கு றோ.க. எதிர் கரணவாய் ம.வி.
- உடுப்பிட்டி அ.மி.க. எதிர் சிதம்பராக் கல்லூரி.

(50-155)


**தேவை**

Computer Typing, DTP என்பவை தெரிந்த யாழ். நகர எல்லைக்குள் வசிக்கும் பெண் ஒருவர் தேவை. மேற்படி தகைமை உடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி.
நாவலர் இன்ஸ்ரிரியூட், ஆனைப்பந்தி, யாழ். T.P:- 0773 991599.

**கமலக்கண்ணன் திருமணசேவை**

73, 75ஆம் ஆண்டு [illegible] PR 76,77, 78ஆம் ஆண்டு [illegible] PR 79, 80 [illegible] PR [illegible]
தொடர்பு:- 171/7, [illegible] தொ.பே.: 0776070862 0775925455
நல்லூர், யாழ்ப்பாணம். (67184)

**தேசத்தின் சமாதானத்திற்கான பொதுவான**

**ஐக்கிய உபவாச ஜெபம்**

செய்தியாளர்: போதகர் S. சந்திரசேகர் (கானான் ஜெப ஆலயம்)
இடம்: தேவசபை (A.O.G) No: 14, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்
காலம்: நாளை (20.10.2007) சனிக்கிழமை
நேரம்: ஆரம்பம் காலை 9 .30 மணி முதல்

என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி ... (11 நாளாகமம் 7:14)

ஜெபிக்க விரும்பும் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

அனுசரணை NCEASL
யாழ்.சபைகள் ஸ்தாபனங்களின் ஐக்கியம், போதகர் ஒன்றியம், யாழ்ப்பாணம். (67188)

**IIS மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2008**

வட இலங்கையிலே கணனிக்கல்விக்கு தனித்துவம்மிக்க நிறுவனமாக விளங்கிவரும் நாம் இ் குடாநாட்டு மாணவர்களின் கணனித்துறையின் முக்கியத்துவத்தினை உணர்த்தி ஆர்வத்தினை அதிகரிக்கும் நோக்குடன் ஆண்டுதோறும் கணனிக்கல்வியில் ஆர்வம் உள்ள மாணவர்களுக்கு புலமைப்பரிசிலினை கடந்த 12 வருடங்களாக வழங்கி வருகின்றோம். அந்த வகையிலே எதிர்வரும் கல்வியாண்டு 2008/2009 ல் கணனிக்கல்வியை கற்க விரும்பும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கும் நோக்குடன் இத்திட்டத்திற்கான விண்ணப்பங்கள் எமது நிறுவனத்தால் கோரப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் இணைவதனூடாக உங்கள் திறமைக்கு ஏற்ற வகையில் கணிசமான கட்டணச்சலுகை (100%,75%,50%,25%) களைப் பெற்றுக்கொள்வதோடு ஒன்றிற்கு மேற்பட்ட **Diploma** கற்கைநெறிகளை பயில்வதற்கான சந்தர்ப்பத்தையும் பெற்றுக்கொள்கின்றீர்கள்.

**விண்ணப்பிக்கும் முறை**

உங்கள் விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து ரூபா 200 பரீட்சைக்கட்டணத்துடன் (19 வயதிற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு பரீட்சைக்கட்டணம் ரூபா 150 மட்டும்) கீழ்க்காணும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும். காசுக்கட்டளையாக அனுப்ப விரும்புவோர்
**Director, Institute of Informatics Studies.** எனும் பெயர் இட்டு பணம் பெறும் நிலையம் **Post Office, Jaffna.** எனக் குறிப்பிட வேண்டும்.

விண்ணபங்கள் வந்துசேர வேண்டிய முகவரி :
**Director,
Institute of Informatics Studies,
100, Clock Tower Road, Jaffna**

**தெரிவுசெய்யும் முறை**

இப் புலமைப்பரிசில் திட்டத்திற்காக IIS இனால் நடாத்தப்படும் (பொது அறிவு நுண்ணறிவு) போட்டிப்பரீட்சையில் தோற்றுவதன் மூலம் நீங்கள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் உங்களுக்குரிய புலமைப்பரிசில் தீர்மானிக்கப்படுகின்றது.

**விண்ணப்பிக்க தகுதி உடையோர்**

- 15 வயதிற்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள்
- ஆசிரியர்கள்
- அரச தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர்
- துறைசார் வல்லுனர்கள்

**போட்டிப் பரீட்சை நடைபெறும்**

1.. வலிகாமம்
2.. வடமராட்சி
3. தென்மராட்சி

**பயிற்சி நெறிகள் நடாத்தப்பட இருக்கும் IIS ன் பயிற்சி மையங்கள்**

- IIS தலைமை அலுவலகம்
- IIS நெல்லியடி
- IIS மானிப்பாய் (தை மாதம் முதல் ஆரம்பமாகும்)
- IIS சவகச்சேரி (தை மாதம் முதல் ஆரம்பமாகும்)

கடந்த 12 வருடங்களாக பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் நன்மையடைந்த இத்திட்டத்தின் கீழ் நீங்களும் இணைந்துகொள்வதனூடாக வளமான ஒரு எதிர்காலத்திற்கு அத்திவாரம் இட்டுக்கொள்கின்றீர்கள்.

21/10/2007 விஜயதசமி முதல் பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பப்படிவம் பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்கள்......
IIS - தலைமை அலுவலகம், IIS - நெல்லியடி, PC Paradise - யாழ்ப்பாணம்,
IBMS - சாவகச்சேரி, வலிகாமம்,வடமராட்சி,தென்மராட்சியில் உள்ள பிரபல புத்தகசாலைகளில்.

**A/L 2008** பரீட்சைக்குத்தோற்றவுள்ள மாணவர்களே !! உங்களுக்காகவே செப்ரெம்பர் மாதத்தில் விசேட பிரிவு ஆரம்பமாகும்.

**சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் !**
கணனிக்கல்விக்கு தனித்துவம் மிக்க **IIS** நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்.

**INSTITUTE OF INFORMATICS STUDIES ( IIS )**
100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
T.P.No: 021 222 2831 E-mail: iiscc@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.நகரப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலுக்கு மாறாக பொருள்கள் விற்பனை

## பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ்.நகரப்பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்கள் சிலவற்றில் விலைப்பட்டியல்களுக்கு மாறாகப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அனைத்து வர்த்தக நிலையங்களிலும் பொருள்களின் விலைகள் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டவேண்டும் என்று யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் அறிவுறுத்தல் விடுத்தமையை அடுத்து வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியல்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

அவை வெறும் ஏமாற்றுக்கே வைக்கப்பட்டுள்ளதாக அங்கு பொருள்களை வாங்கச் செல்லும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்ததாவது :-

யாழ்.நகரப்பகுதியில் அருகருகே உள்ள சில கடைகளிலேயே மாறுபட்ட விலைகளில் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

உதாரணமாக அங்கர் பால்மா பைக்கற் ஒன்று 230 ரூபா, 235 ரூபா, 260 ரூபா, 240 ரூபா எனப் பல்வேறு விலைகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

வர்த்தக நிலையம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த விலைப்பட்டியல் ஒன்றில் 230 ரூபா என அங்கர் பால்மா பைக்கற்றின் விலை போடப்பட்டிருந்தது.

உள்ளே சென்று கேட்டபோது 260 ரூபா என்று கூறப்பட்டது. விலைப்பட்டியலில் 230 ரூபா என்றுதானே போடப்பட்டுள்ளது என்று கேட்டபோது, அது பழைய விலை என்று அங்கு வியாபாரம் மேற்கொண்டவர்களால் கூறப்பட்டது என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இது போலவே ஏனைய பொருள்களின் விலைகளும் காணப்படலாம் என்று சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது. தற்போதைய விலையைப் பட்டியலில் போடாது பழைய விலை போடப்பட்டது ஏன்? அங்கர் பால்மா ஒன்றின் உண்மையான விலை என்ன என்பது அவர்களுக்குத் தெரியாதா? ஏன் இவ்வாறு மாறுபட்ட விலைகளில் விற்பனை செய்கின்றனர்? அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் எடுப்பதில்லையா? என அவர்கள் மேலும் பல கேள்விகளை எழுப்பியுள்ளனர்.

விரைவில் உரிய அதிகாரிகள் இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர். (203)

# வீதிகளில் உள்ள மரங்களின் கிளைகளை வெட்டி எறிவதால் பயணிகள் சிரமம்

யாழ்ப்பாணம்,ஒக்.19

வீதிகளில் வெட்டி வீழ்த்தும் மரக்கிளைகளால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இலங்கை மின்சார சபை ஊழியர்களின் அக்கறையற்ற செயல்களினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

எதுவித முன்னறிவித்தலுமின்றி வரும் மின்சார சபை ஊழியர்கள் தங்களது எண்ணப்படி வீதியருகில் நிற்கும் மரங்களை வெட்டி வீதிகளில் எறிந்து விட்டுச் செல்கின்றனர்.

இதனால் வீதிகளில் நடந்து செல்லும் பொதுமக்கள் அவற்றினைத் துப்பரவு செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது.

மரக்கிளைகளை வெட்டுவோர் அவற்றினை வேலியோரமாகப் போடாமல், வீதிகளின் குறுக்கே போட்டுவிட்டுச் செல்வதாகவும் வீதிகளில் போடப்படும் மரக்கிளைகள் அந்த இடத்திலேயே வாரக்கணக்கில் கிடப்பதால் பொதுமக்கள் வீதியில் பயணிக்க முடியாதுள்ளதாகவும் தெரிவித்தனர்.

மின்கம்பிகளுக்கு இடைஞ்சலின்றிக் காணப்படும் மரக்கிளைகளைக் கூட வெட்டி வீழ்த்துவது குறித்தும் கவலை தெரிவிக்கப்பட்டது. (203-207)

# கிராம அபிவிருத்திச் சங்கங்களை மீண்டும் பதியக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.19

கிராம அபிவிருத்திச் சங்கங்களை மீண்டும் பதிவு செய்துகொள்ளுமாறு வடக்கு மாகாண கிராம அபிவிருத்திப் பணிப்பாளர் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஏற்கனவே இக் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தற்போதைய இப் புதிய அறிவிப்பினால் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் உறுப்பினர்கள் குழம்பிய நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (203-100)




# கிராமசேவகர் அலுவலகம் இடம் மாற்றம்

சுழிபுரம்,ஒக்.19

தொல்புரம் கிழக்கு கிராம சேவகர் தமது அலுவலகத்தை இம்மாதம் முதல் தொல்புரம் கிழக்கிற்கு இடம் மாற்றம் செய்துள்ளார்.

இந்த அலுவலகம் சிவபூமி முதியோர் இல்லத்திற்கு அருகிலுள்ள வீதியில் அமைந்துள்ளது. மக்களின் வசதிக்கு ஏற்ப இந்த அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. (203-28)

# 'கனகசெந்தி' கதா விருதுக்கு இம்முறை 7 சிறுகதைகள் தெரிவு

யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ்.இலக்கியவட்டம் வருடாந்தம் வழங்கி வரும் 'கனகசெந்தி' கதாவிருதுக்கு 2006 ஆம் ஆண்டிற்கென 7 சிறுகதைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

யாழ்.இலக்கியவட்டம் கடந்த ஐந்தாண்டுகளாக ஈழத்துப் பத்திரிகைகளில் பிரசுரமாகின்ற சிறுகதைகளில் மிகச் சிறப்பானவற்றைக் காலத்துக்குக் காலம் தெரிவு செய்து ஈழத்தின் மூத்த புனைக்கதைப் படைப்பாளி, விமர்சகர், யாழ்.இலக்கிய வட்டத்தின் பிதாமகர் அமரர் இரசிகமணி கனகசெந்திநாதனின் நினைவின் பெயரால் 'கனகசெந்தி கதா விருது' வழங்கி வருகின்றது.

முன்னைய காலங்களில் எம்.என். அமானுல்லா, புலோலியூர் ஆ.இரத்தினவேலோன், ஏ.எஸ்.உபைத்துல்லா, சி.கதிர்காமநாதன், ஜுனைதா ஷெரீப், செம்பியன் செல்வன், சாந்தன், நீர்வைப் பொன்னையன், குந்தவை, க.சட்டநாதன் ஆகியோர் பெற்றுள்ளனர்.

இம்முறை பின்வரும் படைப்பாளிகளும் அவர்களின் ஆக்கங்களும் 'கனகசெந்தி' கதாவிருதுக்குத் தெரிவாகியுள்ளன.

* ஓ வெள்ளவத்தை: செங்கை ஆழியான் (தினக்குரல் 29.10.2006).
* பெரியவன் : பன்.பாலா (வீரகேசரி 14.01.2007).
* சம்ஹாரம்: திருமலை வீ.என்.சந்திரகாந்தி (வீரகேசரி,21.01.2007).
* நெஞ்சாங்கூட்டு நினைவுகள்: புலோலியூர் ஆ.இரத்தினவேலோன் (தினக்குரல், 25.02.2007).
* காணவில்லை: யோகேஸ்வரி சிவப்பிரகாசம் (ஞானம், 04,2007)
* பிணங்கள் விற்பனைக்கு: கனகசபை தேவகடாட்சம் (தினக்குரல், 27.05.2007).
* என் இனிய தோழனே: திருமதி பவானி தேவதாஸ் (வீரகேசரி, 03.06.2007).

'கனகசெந்தி' கதாவிருது பெறும் 17 சிறுகதைகளையும் முழுமையான ஒரு தொகுதியாக வெளியிட மீரா பதிப்பகம் முன்வந்துள்ளது. (202)

# வடிகாலில் ஏற்பட்டுள்ள குழியால் பாதசாரிகள் சிரமம்

யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ்.நகரில் கஸ்தூரியார் வீதியில் 'மாக்பெட்' எரிபொருள் விற்பனை நிலையத்திற்கு முன்பாகவுள்ள கழிவு நீர் ஓடும் வடிகாலில் பெரிய அளவிலான குழி ஏற்பட்டுள்ளதால் பாதசாரிகள் சிரமமடைந்து வருகின்றனர்.

இந்த வடிகால் கடந்த சில மாதங்களாகச் சேதமடைந்து காணப்படுகின்றது. அதனைப் புனரமைப்பதற்குச் சம்பந்தப்பட்ட எவரும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (203-224)

# குடாநாட்டில் விலங்கு விசர் நோயைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகள் தீவிரம்

யாழ்ப்பாணம்,ஒக்.19

குடாநாட்டில் நாய்களுக்கான விலங்கு விசர் நோயைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் ஈடுபட்டுவருகின்றனர். இதன் ஓர் அங்கமாக 50 ஆயிரத்து 775 நாய்களுக்கு விலங்கு விசர் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது எனப் புள்ளிவிவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஒழுங்குபடுத்தலில் பிரிவு வைத்திய அதிகாரி பணிமனைகள் ஊடாக விலங்கு விசர் நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குடாநாட்டில் 79 ஆயிரத்து 741 நாய்கள் உள்ளன என மதிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில் 50 ஆயிரத்து 775 நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

தெல்லிப்பழைப் பிரிவில் 8 ஆயிரத்து 990 நாய்களுக்கும், கோப்பாய் பிரிவில் 11 ஆயிரத்து 272 நாய்களுக்கும், பருத்தித்துறைப் பிரிவில் 10 ஆயிரத்து 330 நாய்களுக்கும் -

மானிப்பாய் பிரிவில் 11 ஆயிரத்து 107 நாய்களுக்கும், சாவகச்சேரிப் பிரிவில் 5 ஆயிரத்து 17 நாய்களுக்கும், ஊர்காவற்றுறைப் பிரிவில் 656 நாய்களுக்கும், யாழ்ப்பாணப் பிரிவில் 3 ஆயிரத்து 403 நாய்களுக்கும் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. (202-131)

# கொட்டடி, நாவாந்துறை பகுதிகளில் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ்ப்பாணம் கொட்டடி, நாவாந்துறைப் பகுதிகள் நேற்று வியாழக்கிழமை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது சந்தேகத்தின் பேரில் எவரும் கைது செய்யப்பட்டதாகத் தெரியவரவில்லை. (203-111)

# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர் விவரம்

யாழ்ப்பாணம்,ஒக்.19

கடந்த ஓகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களின் விவரங்கள் பாடசாலை அதிபர்களால் வெளியிடப்பட்டுள்ளன.

சில பாடசாலைகளின் முடிவுகள் வருமாறு :-

**கெருடாவில் இ.த.க.பாடசாலை**
த.நிவேதினி (169), ற.றம்சியா (151), சொ.கௌதமன் ஐயர் (143).

**அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி**
க.சங்கீத் (182), ச.சிவப்பிரியன் (160), ச.சுகன்யா (156), தி.சங்கீதா (149), வே.ஐந்துஜா (148), பு.சிவானுசன் (146), ந.யசிந்தா (142).

**தேவரையாளி இந்துக் கல்லூரி**
த.கோமகன் (149), வ.அபினையா (140).

**வடமராட்சி இ.ம.கல்லூரி**
இ.யதுஷா (162), செ.மஜிதா (154), ஜெ.தனுஜா (161), பா.பிரவீனா (156), பா.நர்மதா (155), த.வாசுகி (155), செ.மஜிதா (154), வ.உதயப்பிரியா (152), ர.தாட்சாயினி (150), செ.ஷர்மினி (149), உ.சகானா (149), சி.பவித்திரா (147).

**மயிலணி சைவ ம.வித்தி.**
ஸ்ரீ.இன்டிக்கான் (145), சௌ.பிரஷாலினி (140).

**வேலணை கிழக்கு ம.வி.**
க.லக்ஷினி

**சண்டிலிப்பாய் வடக்கு த.க.பாடசாலை**
ப.காண்டீபன் (157).

**அல்லாரை அ.த.வித்தி.**
தை.நிரூஜா (149), ச.யபோசன் (140), இ. அர்ச்சனா (140).








'காலத்தை வென்ற கமலம்' நூல் வெளியீட்டு விழா கடந்த 13 திகதி சனிக்கிழமை கொழும்பு, பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. விழா நாயகரான யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பிதாமகனும் முதல் பீடாதிபதியுமான கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதனின் பாரியார் மாலை அணிவித்து வரவேற்கப்படுகிறார். கலாநிதி கமலநாதன் அருகில் உள்ளார். விழாவுக்கு தலைமைவகித்த அகில இலங்கை இந்து மாமன்றச் செயலர் சட்டத்தரணி கந்தையா நீலகண் [illegible] நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### கனகசபை காராளசிங்கம்



யா/தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் 1989இல் ஆசிரியப் பணியில் இணைந்து, சாரணியப் பொறுப்பாசிரியராக, விளையாட்டுத் துறைத் தலைவராக, பகுதித் தலைவராகச் செயற்பட்டு 01.10.2007 தொடக்கம் யா/தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளியில் அதிபராகப் பதவி உயர்வு பெற்றுள்ளமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன்,

அவர் சேவையில் மேலும் உயர்வு பெற எல்லாம் வல்ல சிவகாமி சமேதே நடராஜப் பெருமானை வேண்டுகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
**யா/மகாஜனாக் கல்லூரி.**

(67175)


## நவராத்திரி பூசைகள்

யாழ்ப்பாணம்,ஒக்.19

நீர்வேலி தெற்கு ஞானவைரவர் ஆலயத்தில் நவராத்திரி பூசை வழிபாடுகள் தினமும் மாலை 5 மணிக்கு விஷேட அபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. (203-224)

* * *

கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் வாணி விழா இன்று வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் சீ.மகிந்தினி கலந்து கொள்வார். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (203-224)

* * *

நல்லூர் பிரதேச செயலக நவராத்திரி விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் சொற்பொழிவு நிகழ்த்துவார். (203)

* * *

யாழ்.நீராவியடி ஐடியல் கல்வி நிறுவனத்தின் நவராத்திரி பூசை நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

நிர்வாக இயக்குநர் வி.என்.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்வும் இடம்பெறும். (203)

* * *

ஈச்சமோட்டை சம்றொக் கல்வி நிறுவன நவராத்திரி விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும். (203)

* * *

வடமராட்சி வலய அலுவலகத்தில் நவராத்திரி பூசைகள் இன்று மு.ப.10 மணிக்கு இடம்பெறவுள்ளன. (160)

* * *

திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலய நவராத்திரி விழாவும்பரிசளிப்பு விழாவும் இன்று மு.ப.10 மணிக்கு அதிபர் திருமதி ஸ்ரீ. சிவராஜா தலைமையில்நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (203-160)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




சுவர்ணசிலன்- செல்வராணி
தம்பதியரின்செல்வப் புதல்வன் **அபிலக்ஷன்**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று 19.10.2007 வெள்ளிக்கிழமை துலாக்கட்டில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அண்ணாமார், அக்காமார், அப்பம்மா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார்,அத்தான்மார், மச்சான்மார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் ஞானியார் வளவு வைரவர் மற்றும் சக்கலாவத்தை ஞானவைரவர் அருளுடன் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகிறார்கள்.

வாழ்த்துவோர்:
**அப்பம்மா.**
துலாக்கட்டு, வதிரி, கரவெட்டி.
(சி/54012)



## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு
25 . 04 . 1937

உதிர்வு
30 . 10 . 2006

திருமதி
### திருநாவுக்கரசு கமலாதேவி

திதி: அட்டமி

ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்
ஆயிரம் உறவுகள் இருந்தும்
அவையெல்லாம் உன் அன்புக்கு ஈடாகுமா?
ஆண்டுகள் பல சென்றாலும் உங்கள்
இனிய நினைவுகள் எம்மை விட்டு நீங்காது!

சுதுமலை வடக்கு, மானிப்பாய். **குடும்பத்தினர்.**

(67182)



## அன்பொளி கல்வியகம்
இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை- 2007 சித்தியடைந்த மாணவர்களுக்கான

### பரிசளிப்பு நிகழ்வு

எமது கல்வியகத்தில் கல்வி கற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு 21.10.2007 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

- இயக்குநர்.

குறிப்பு: இதுவரை பதியத் தவறியவர்கள் உங்கள் பெறுபேறுகளை அலுவலகத்தில் பதிவுசெய்யவும். (67158)



15.10.2007 முதல் 08.11.2007 வரை

## தீபாவளி மலிவு விற்பனை

நீங்கள் வாங்கும் சகல பொருள்களுக்கும்
**விசேட கழிவு**
உடனே விஜயஞ்செய்யுங்கள்

### லைடன் புடைவை நிலையம்

இல. 410, ஆஸ்பத்திரி வீதி(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம். தொ.பே.: 222 2381

(சி/53968)



## COMTEC
சமூக தொழில் நுட்பக் கல்வி நிலையம்

### ஊழியர் தேவை

சுழிபுரத்தில் அமைந்துள்ள கொம்ரெக் நிறுவனத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள வாகன சுத்திகரிப்பு நிலையத்திற்கு 2 வருட அனுபவம் உடைய ஊழியர் தேவை. கீழ் குறிப்பிடப்பட்ட விலாசத்திற்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

இயக்குநர்,
கொம்ரெக், சுழிபுரம்.

(சி/54031)



ஓம் ஸ்ரீராம் ஜெய்ராம் ஜெய்ஜெய்ராம்

அருள்மிகு ஸ்ரீ வாலையம்மன் தேவஸ்தானம்

## சண்டி ஹோமம்

20.10.2007 சனிக்கிழமை

நவராத்திரிபூர்த்தியை முன்னிட்டு 20.10.2007 சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மஹா சண்டிஹோமம் திருநெல்வேலி கிழக்கில் அமைந்துள்ள வாலையம்மன் கோயிலில் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. இதன் பூர்வாங்கக் கிரியைகள் விநாயகர் வழிபாடு, நவக்கிரக வழிபாடு இன்று (19.10.2007) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் ஆரம்பமாக உள்ளது. சனிக்கிழமை சண்டி ஹோமத்தைத் தொடர்ந்து ஸ்ரீ சக்கர நவாவரண மஹாயந்ரபூஜை, சுமங்கலி பூஜை, குமாரி பூஜை ஆகியனவும் நடைபெறும். அடியார்களை இந்த மஹா சண்டிஹோமத்தில் பங்குபற்றி இன்னருள்பெற வேண்டுகின்றோம்.

(67181) **நிர்வாகம்.**



யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை *(வ-து)*
நீர் இறைக்கும் இயந்திரங்கள், உதிரிப்பாகங்கள் விற்பனை செய்வதற்கான

## கூறுவிலை கோரல்

1. பாவித்த நல்ல நிலையிலுள்ள நீர் இறைக்கும் இயந்திரங்கள்
   - றொபின் EY 20 - 06
   - ஹொண்டா GK -01
   - மீளளிப்பு செய்யப்பட்ட கூடிய வைப்பு - ரூபா 2000/=
   - விண்ணப்பப்படிவம் - ரூபா 100/=
   - முடிவு திகதி: 2007.10.30 நண்பகல் 12 மணி
2. உதிரிப்பாகங்கள்
   - பிஸ்ரன் - 25 (சென்ரர் ஆணி லொக் இன்றி)
   - வாசர் - 25
   - வோட்டர் சீல் -25
   - மீளளிப்பு செய்யப்படக்கூடிய வைப்பு- ரூபா 1000/=
   - விண்ணப்பப்படிவம்- ரூபா 50/=
   - முடிவு திகதி: 2007.10.30 நண்பகல் 12 மணி

இயந்திரங்களையும், உதிர்ப்பாகங்களையும், விவரங்களையும் அலுவலக நேரத்தில் பார்வையிட்டு, சபையில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கவும்.

வீரசிங்கம் மண்டப கட்டடத் தொகுதி,
2 ஆம் மாடி, 12, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

**செயலாளர்,**
**யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை.**

(சி/54035)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லன எல்லாம் தரும் சக்தியைச் சரணடைவோம்

சிவனுக்குரிய விரதம் சிவராத்திரி. சக்திக்குரிய விரதம் நவராத்திரி. சிவனுக்கு ஒரு நாள் சக்திக்கு ஒன்பது நாள்கள். இதனால் சிவசக்தியின் முதன்மையும் பெருமையும் உணரப்படும். இறைவனை இயக்கி, இப்பிரபஞ்சத்தையே இயக்குபவள் சக்தி, எனவே, ஒன்பது நாள்கள் சக்தியைப் போற்றுதல் சாலச் சிறந்தது. 'எங்கெங்கு காணினும் சக்தியடா' என்றார் பாரதியார். 'சக்தி பின்னமிலான்' என்பது திருவருட்பயன். எனவே சக்தியின் இயக்கமே சர்வமும். சக்தியைப் பெண்ணாக உருவகித்து, தெய்வமாய் போற்றி, வாழ்வில் சிறப்பும் உயர்வும் கண்டவர்கள் தமிழர்கள். தனிமனிதனும் இனமும் நாடும் தனது சக்தியை உணர்ந்து அதனை விருத்தி செய்யவதன் மூலமே தரணியில் தலைமை பெறலாம். வாழ்வின் வளத்திற்கு வல்லமைகள் தேவை. அது மனவலிமையாகவும் செல்வச் சிறப்பாகவும் கல்வி நலமாகவும் இருக்கலாம். இம்மூன்றும் ஒருங்கே வாய்க்கப்பெற்றால் முழுமையான வளர்ச்சியைப் பெற்று முதன்மை பெறலாம். இவை மூன்றையும் குறைவின்றிப் பெறுவதற்கு வழிபாடியற்றுவதற்குரிய நாள்களே நவராத்திரி நாள்களாகும்.



நவராத்திரம் என்னும் வடமொழி நவராத்திரி எனத் தமிழில் மருவி வழங்கு கின்றது. நவராத்திரி ஒன்பது இரவுகள் எனப் பொருள்படும். இந்த ஒன்பது நாள்களிலும் பகலிலும் இரவிலும் செய்யும் பூசைகள் யாவும் தேவிக்கே உரியன.

இவ்விழா நவராத்திரி என்னும் தேவையைக் குறித்து செய்யப்படுவதால் தேவி பூசை என்றும் நவமி நாளில் முடிவடைய மகாநவமி என்றும் சரஸ்வதி பூசையுடன் முடிவடைவதால் சரஸ்வதி பூசை என்றும் கடைசியாக ஆயுதங்களை வைத்துப் பூசிப்பதால் ஆயுத பூசை என்றும் கூறுவர்.

**ஞானக்கதிர்**

பிரமத்தை சக்தி ரூபமாக உபாசிப்பது அநாதி காலத்தொட்ட வழக்கமாகும். கடவுளைத் தாயாகத் தியானிப்பதில் நமது மனத்திற்குச் சாந்தி உண்டென்பதை எவரும் மறுக்கமுடியாது. மனிதப் பிறவி எடுத்து சதா தவறுகள் புரிந்துவரும் நமது பாவங் களையும் நமக்கு உடலளித்த தாய்மார் களால் போக்கமுடியாது. சகல சீவராசி களின் தாயாகிய பராசக்தியினால்தான் அதுமுடியும். அதனால்தான் அம்பாளை 'ஸ்ரீ மாதா' என்று விசேடமான பெயர் கொண்டு வழிபடுகின்றோம். தேவியைப் பூசிப்பது நமக்கு வேண்டிய உபகரிப்புகளைப் பெறுவதற்கேயாம். அம்பிகையை அனுதினமும் அர்ச்சித்தால் அருள்பேறுகள் ஆனந் தம் அடையப் பெறுவோம் என்று அருளும் அபிராமிப்பட்டர்

*தனம் தரும் கல்வி தரும்*
*ஒருநாளும் தளர்வளியா*
*மனம் தரும் தெய்வவடிவும் தரும்*
*நெஞ்சில் வஞ்சமிலா*
*இனம் தரும் நல்லன எல்லாம் தரும்*
*அன்பர் என்பவர்க்கே*
*கனம் தரும் பூங்குழலாள்*
*அபிராமி கடைக்கண்களே*

என்று போற்றுகிறார்.

சுடர்மிகும் அறிவு தந்து ஆதாரமாய், அருந்துணையாய் இருக்கும் அன்னை பராசக்தியிடம் மாநிலம் பயனுற வாழ வகை செய்யவேண்டும் என்று வரம் வேண்டுகின்றார் பாரதியார். நாமும் சக்தியிடம் சரண டைந்து சகல சம்பந்துகளும் பெற்று வாழ்வில் ஒளி பெற்றுயர வரம் வேண்டுவேமாக.

*(நன்றி: சைவமஞ்சரி)*

# வாசகர் திருமுகம்

## மாணவர்கள் விழிக்கும்போது மின்சாரம் தூங்குகிறது; மின்சாரம் விழிக்கும்போது மாணவர்கள் தூங்குகிறார்கள்!

இலங்கை மின்சாரசபை குடாநாட்டில் எவ்வளவோ சிரமத்தின் மத்தியில் சேவையாற்றி மக்களுக்கு மின் வழங்குகிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அதற்காக நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். இருப்பினும் சில தவறுகளைச் சுட்டிக்காட்ட வேண்டியது அவசியமாகிறது. தற்போது சுழற்சி முறை மின்சாரம் வழங்கப்படுவாதாக சொல்லப்படுகிறது. ஆனால் சில பிரதேசங்களுக்கு சுழற்சி முறையின்றி 24 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்படுகிறது. சில பிரதேசங்களுக்கு சுழற்சி முறையின்றியே தினமும் மாலை 6 மணி தொடக்கம் இரவு 9.30 வரை மின்வெட்டு அமுலாக்கப்படுகிறது இது ஏன்?

விசாரித்தால் அது ஆஸ்பத்திரி 'லைன்' என்கிறார்கள். மின்வெட்டு நேரத்தில் ஆஸ்பத்திரிக்கு விசேட ஏற்பாடாக தனி இயந்திரங்கள் வழ்ங்கப்பட்டுள்ளன. அப்படி இருந்தும் ''நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்குமாங்கே பொசியுமாம்'' என்பது போன்று அதே 'லைன்' சேந்தவர்கள் 24 மணிநேர மின்சாரத்தை பயன்படுத்தும்போது ஏனைய பிரதேச மக்களுக்கு மிக அத்தியாவசியமான நேரத்தில் மின்னை துண்டிப்பது நியாயமானதா? மாணவர்கள் வெளிச்சத்தில் கற்பது மட்டுமல்ல. கணனிக் கல்வி, கணனி மூலமான வேறு பாட விதானங்கள், சீடிக்கள் மூலமான கல்வி என எல்லோரும் மின்சாரத்தையே நம்பியிருக்க வேண்டியுள்ளது.

இப்படி இருக்கும்போது மாணவர்கள் விழித்திருக்கும் நேரத்தில் (மாலை 6.00 - இரவு 9.30 ) மின்சாரம் தூங்கிவிடும். மின்சாரம் விழிக்கும் போது மாணவர்கள் தூங்கி விடுவார்கள் (இரவு 9.30 -அதிகாலை 5.00) பின்னர் மாணவர்கள் விழிக்கும்போது மின்சாரம் தூங்குகிறது( அதிகாலை 5.00). ஆகவே எமது மாணவர்களின் கல்விக்கு மின்சாரசபையே ஆப்பு வைக்கிறது என்று குற்றஞ்சாட்டுகிறேன். கடந்த உயர்தர பரீட்சைக் காலத்தில் இந்நிலை தொடர்ந்தது. தற்போது சாதாரணதரப் பரீட்சை நெருங்கி வருகிறது. இதை மின்சார சபை அதிகாரிகள் கவனத்தில் கொள்வார்களா?

நிரந்தர மின் பாவனையாளர்கள் மின் பாவனையைக் கட்டுப்படுத்தி மின்சாரத்தை சேமித்து உதவினால் மின்வெட்டு ஏற்படாது என அதிகாரிகள் கோருகின்றனர். ஆனால் உரும்பிராய் கிழக்கு, கரந்தன் வீதி பிரசேத்தில் சட்டவிரோத மின்சாரம் பெறுவோர் எண்ணிக்கை, மிகவும் அதிகம். நாம் மின்சாரத்தை சேமிக்கிறோம். அவர்கள் துஷ்பிரயோகம் செய்கிறார்கள். ஆகவே சட்டவிரோத மின் பாவனையாளர்களை சட்டத்தின் முன் நிறுத்துவது அவசியம். இதை அதிகாரிகள் செய்வார்களா? மின் கேபிள்களில் பெரும் சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது நாளடைவில் முழு மின் விநியோகத்தையும் பாதிக்கும் அல்லவா?

அவசிய திருத்த வேலைக்காக ஒரு நாள் மின்துண்டிக்கும் போது வருத்தம் தெரிவிக்கும் அதிகாரிகள், தினமும் எதுவித முன் அறிவித்தலும் இன்றி துண்டிக்கும் போது ஏன் வருந்துவதில்லை..

ஆகவே அரச அதிபர், மின்சாரசபை அதிகாரிகள் இவ்விடயத்தில் அதிக அக்கறையுடன் செயற்படவேண்டும்.

*நீர்வேலி.* நா.இராசநாயகர்.

## மின்வெட்டில் பாரபட்சம் ஏன்?

கந்தரோடை, உடுவில் வீதியில் உள்ள மின்மாற்றி மூலம் மின்சாரம் வருகின்ற கற்பொக்கணை, கந்தரோடை அதை அண்டிய பிரதேசங்களில் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் மாலை 6.30 தொடக்கம் இரவு 9.30 மணிவரை தவறாமல் மின்வெட்டு அமுல்படுதப்படுகின்றது. அதேவேளை ஏனைய பகுதிகளான டச்சு றோட், உடுவில் கிழக்கு அம்பலவாணர் வீதி, உடுவில் அம்மன் ஆலய சுற்றாடல் பகுதிகளில் மின் வெட்டு அமுல்படுத்தப்படுவதில்லை. ஏன் இந்தப் பாரபட்சம்? சமீப நாள்களாக இந்தத் தவறு ஒழுங்காக நடந்து வருகிறது. மின்சார சபையினரைக் கேட்டால், அது கே. கே.எஸ்.'லைன்' அப்படித்தான் மின்தடை இருக்கும் என்று கூறுகிறார்கள். அப்படியாயின் அந்த கே.கே.எஸ்.லைனை மாற்றி - மின் தடை செய்யாத பகுதிகளுக்கும் மின் தடையைச் செய்யலாமே. குறிப்பிட்ட எமது ஒரு பகுதியை மாத்திரம் வேண்டுமென்றே மின்வெட்டை மின்சார சபையினர் செய்வது, பெரும் அநீதியான செயலாகும். உடனடியாக மேலதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுத்து நீதி வழங்கவேண்டுகிறோம்.

*உடுவில்.* - ப.க.கந்தசாமி.

# யால மீதான புலிகளின் அதிரடித் தாக்குதல்; பொருளாதாரத்தின் மீது விழுந்த அடி!

**யால மீதான புலிகளின் தாக்குதல் குறித்து கொழும்பு ஆங்கில வார ஏடு ஒன்று வெளியிட்டுள்ள ஆய்வுக் கட்டுரையின் தொகுப்பு இது.**

கடந்த திங்களன்று யாலவில் அமைந்துள்ள இராணுவத்தினரின் மினி முகாம் ஒன்றை விடுதலைப்புலிகள் தாக்கி அழித்திருந்தனர். இந்தச் சம்பவத்தில் மொத்தம் 7 படையினர் உயிரிழந்தனர் என்பதும் தெரிந்ததே. புலிகளின் இந்த தாக்குதலானது 'இலங்கையின் பொருளாதாரத்தின் மீது விழுந்த அடி.

கடந்த வாரம் மனித உரிமை மீறல்கள் விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் லூயிஸ் ஆர்பருடன் அரசு கடும் வாக்குவாதங்களில் ஈடுபட்டிருந்த வேளையில், திங்கட்கிழமை மாலை யால சரணாலயத்தில் உள்ள தல்கஸ் மங்கடப் பகுதியில் அமைந்திருந்த இராணுவ நிலை மீது விடுதலைப் புலிகள் அதிர்ச்சிகரமான தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதல் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். உண்மையான போர் அண்மிக்கின்றது என்று கடந்த வாரம் விடுதலைப் புலிகள் தெரிவித்தமைக்கான எச்சரிக்கை வெடியோசையே இதுவாகும். இது உல்லாசப் பயணிகளை அதிகம் கவரும் பகுதி என்பதனால் பாராமிப்பு வேலைகளுக்காக அது தற்காலிகமாக மூடப்பட்டிருந்தது. எனினும், அது மீளத் திறக்கப்படுவதற்கு 24 மணிநேரத்திற்கு முன்னரே விடுதலைப் புலிகள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

ஏற்கனவே, கடுமையான பாதிப்புகளை சந்தித்துள்ள உல்லாசப் பயணத்துறைக்கு இது மற்றுமொரு அடியாகும். இராணுவ நிலை மீதான தாக்குதல் நடத்தப்பட்ட சில மணிநேரங்களில் அமுக்கவெடி தாக்குதலிலும் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார்.

இராணுவத்தினர் இந்தப் பகுதியில் நிலை கொண்டிருந்தபோதும், விடுதலைப் புலிகள் அதற்குள் ஊடுருவியதும், கண்ணிவெடியை புதைத்துவிட்டுச் சென்றதும் கடந்த வருடம் வில்பத்து சரணாலயத்தில் நடைபெற்றதைப் போன்று பெரும் அனர்த்தங்களை ஏற்படுத்தலாம்.

### தெற்கில் தாக்குதல்களை நடத்த முடியும் என்று நிரூபித்துள்ளனர் புலிகள்

பாதுகாப்பிற்காக படை முகாம்க ளையும், தடைகளையும் உருவாக்கும் மஹிந்தரின் வியூகங்களையும் மீறி தென்னிலங்கையில் கடுமையான தாக்குதல்களை இலகுவாக நடத்தமுடியும் என்பதையே இந்த தாக்குதல் நிரூபித்துள்ளது.

மஹிந்தரின் காலப்பகுதியில் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா, இராணுவத்தின் மூன்றாம் நிலைத்தளபதி மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க போன்றவர்கள் மீதான தாக்குதல்கள் உட்பட பல தாக்குதல்கள் தென்னிலங்கையிலும், தலைநகரத்திலும் நடைபெற்றுள்ளன.

விடுதலைப்புலிகளுடன் பேச்சுகளை நடத்த அரசு தயாராக இருப்பதாக உலகத்தை சமாதானப்படுத்த முயற்சித்து வரும் வேளையில், விடுதலைப் புலிகள் ஒரு பெரும் தாக்குதல் திட்டத்தை வகுத்து வருவது தெளிவாகின்றது. பேச்சுகளை நிராகரித்துள்ள விடுதலைப் புலிகள் எதிர்வரும் நாட்களில் போர் தீவிரமடையும் என்று தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மஹிந்த அரசியலுக்கான ஆயுதமாக போரை பயன்படுத்தி வருகின்ற போதும், மறுபுறம் மனித உரிமை விவகாரம் தொடர்பாக அனைத்துலக சமூகத்துடன் முரண்பட்டு வருகின்றார். அரசின் கொடுமையுகளே [illegible] மனித உரிமைக்ள் மற்றும் பொது மக்களை மதிக்காத தன்மை என்பன விடுதலைப் புலிகளின் தனிநாட்டு கோரிக்கைக்கு வலுச்சேர்ப்பதோடு, தமிழ் மக்களையும் அவர்களின் பின்னால் அணிதிரளச் செய்யும். மஹிந்தர் பதவியேற்ற பின்னர் விடுதலைப் புலிகள், பொதுமக்களின் இலக்குகளை தாக்குவதனைத் தவிர்த்தே வந்துள்ளனர். ஆனால்,அரசின் நடவடிக்கைகள் எதிர்மறையானது.

ஆர்பரின் பயணம் இலங்கைக்கு அனுகூலமானதாக இல்லாத நிலையில், யால மீது நடத்தப்பட்ட தாக்குதல் பொருளாதாரத்திலும் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம். இது உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உல்லாசப்பிரயாணிகள் மத்தியில் உடனடியாக தாக்கத்தை ஏற்படுத்தாது விட்டாலும், இலங்கை அரசினால் பெறப்படும் 50 கோடி டொலர் கடனில் பாதிப்புகளை ஏற்படுத்தலாம். இந்தத் தொகையைப் பெறுவதற்காக அரசு பெரும் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

### முதலீடுகளுக்குப் பாதகம்

இலங்கை நுகர்வோர் விலை சுட்டெண் அமைப்பின் தகவல்களின் படி ஜூலை மாதம் வாழ்க்கைச் செலவு 21 விகிதத்தை அடைந்துள்ளது. இது மிக உயர்வானதாகும். பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட 'பிற்ச்' தரப்படுத்தல் நிறுவனமும் 'பிபி நெகடிவ்' என எதிரான தரப்படுத்தலை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

முதலீட்டாளர்களைக் கவரும் முயற்சியில் அரசு ஈடுபட்டு வரும் வேளையில், யால சரணாலயப் பகுதி மீது தாக்குதல் நடைபெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

ஆகவே, முதலீடுகளை செய்வதற்கான சூழ்நிலை இலங்கையில் இல்லை என்ற கருத்தை இந்த தாக்குதல் ஏற்படுத்தலாம். எனவே, ராஜபக்ஷ சகோதரர்களின் தவறான நடவடிக்கைகளுக்கான விலையை உயிரிழப்புகளாகவும், பொருளாதார அழிவுகளாகவும் பொதுமக்களே இறுதியில் செலுத்தவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு விழா

## திருநாவுக்கரசு கிருஷ்ணகுமார் B.A, Dip.in Edu, S.L.P.S - I

### அருளாசிச் செய்தி



யாழ்/பெரியபுலம் மகாவித்தியாலயத்தின் முதல்வர் திரு.கிருஷ்ணகுமார் அவர்கள் பழமையும் பெருமையும் வாய்க்கப் பெற்ற பாடசாலையின் கல்விச் செயற்பாட்டிற்குப் பணியாற்றியவர். அடக்கமும் அறிவும் கொண்டு இன்முகத்துடன் பழகி எடுத்த விடயத்தை செவ்வனே ஆற்றி அனைவரதும் அன்பைப் பெற்றவர். எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்பதற்கமைய இப்பணியில் செயலாற்றிய முதல்வர் அவர்களை இறைவன் ஆசிர்வதிக்க பிரார்த்திக்கின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

இரண்டாவது குருமஹா சந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.**

### பாடசாலையை உருவமைத்த அதிபர்



பாடசாலையை உருவமைப்பதில் பெரும் பங்களிப்பவர்கள் அதிபர்களே. யா/கொக்குவில் ஞானபண்டித வித்தியாலயம், யா/பெரியபுலம் மகாவித்தியாலயம் என்பவற்றில் மாணவ வளம், ஆசிரிய வளம், பௌதீகவளம் என்பவற்றைப் பெற்று பாடசாலை உருவமைப்பில் முன்னின்று உழைத்தவர். அந்தவகையில் யா/பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள இலங்கை அதிபர் சேவை வகுப்பு - 1 ஐச் சேர்ந்த மதிப்பிற்குரிய அதிபர் திரு.தி.கிருஷ்ணகுமார் ஓய்வு பெறுவது கல்விப் புலத்திற்கு இழப்பாகும். அவர் தம் ஓய்வுக் காலம் சிறப்புற வாழ எனது வாழ்த்துக்கள்.

**வே.தி.செல்வரத்தினம்,**
வலயக் கல்விப்பணிப்பாளர், மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்.

### நற்பிரஜைகளை உருவாக்கிய நல்லாசான்



பேராதனைப் பல்கலைக்கழக சிறப்புப் பட்டதாரியாகிய திரு.தி.கிருஷ்ணகுமார் இலங்கை அதிபர் சேவை தரம் - Iஐச் சேர்ந்தவர். இப்பாடசாலையில் மாணவனாக இருந்து அதன் முதல்வராகி சேவைபுரிந்தது சாதனையே. கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டு நற்பிரஜைகளை உருவாக்கிய நல்லாசான் ஓய்வுக் காலம் சிறப்புற வாழ்த்துகிறேன்.

**திரு.சி.இராமலிங்கம் J.P, புதிய முதல்வர்.**

### நல்லதொரு முதல்வர்

அன்பும் அறிவடக்கமும் இன்முகமும் கொண்ட எமது முதல்வர் கடமை வீரன். எவரையுமே புண்படுத்தாத பண்பாளர். இதனால் மாணவ நெஞ்சங்களில் வஞ்சமறக் குடி புகுந்தவர். மாணவர்களுக்கு அறிவுக் கண்ணைத் திறந்த நல்லாசான். இவரது ஓய்வுக் காலம் சிறப்புற எல்லாம் வல்ல நாச்சிமார் அன்னையை வேண்டி நிற்கின்றோம்.

மாணவ முதல்வர் சபை.



**முதல்வர், பெரியபுலம் மகா வித்தியாலயம்**

**தந்தை : சோ.திருநாவுக்கரசு**
*தரம் 1 எழுதுவினைஞர்*

**தாயார் : தி.மகேஸ்வரி**

## திருநாவுக்கரசு கிருஷ்ணகுமார்

கலைமாணி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா

**அதிபர் தரம் - I** (B.A, Dip.in Edu, S.L.P.S-I)

**ஆரம்பக் கல்வி:** யா/பெரியபுலம் மெ.மி.த.க.பாடசாலை
**இடைநிலைக்கல்வி:** யா/இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்
**உயர்நிலைக் கல்வி:** இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை
**பட்டப்பின் கல்வி டிப்ளோமா:** திறந்த பல்கலைக்கழகம்

**அதிபர் தரம் II பரீட்சை சித்தி 1991**

### சேவை விவரம்

1. க.மு.அல்/அஷ்றக் ம.வி. ஆசிரியர் - 1976. 11.01- 1985.02.14
2. யா/கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் - 1985. 02.15- 1993.02.21
3. யா/கோண்டாவில் இராமகிருஷ்ண வித்.உப்அதிபர் - 1993.02.22- 1994.02.13
4. யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித். உப அதிபர் - 1994.02.14- 1996.07.14
5. யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித். அதிபர் - 1996.07.15- 1996.09.30
6. யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித். அதிபர் - 1996.10.01- 2006.01.17
7. யா/பெரியபுலம் ம.வி. அதிபர் - 2006.01.18 - 2007.10.20

### தனித்துவம் மிக்க அதிபர்



பல நூற்றுக்கணக்கான கல்வியியலாளர்களையும் சாதனையாளர்களையும் உருவாக்கிய பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் தனித்துவம் மிக்க அதிபராக விளங்கி பல்லாயிரம் மாணவ பரம்பரையை உருவாக்கியவர் திரு.தி.கிருஷ்ணகுமார். இவர் பணி சிறப்புற ஓய்வுக்காலம் மகிழ்வாகிட ஆசி கூறி வாழ்த்துகிறேன்.

**கை.சிவகரன்,**
உதவிச்செயலர், கல்வியமைச்சு (வ.கி).

### பாடசாலைக் கல்வி வளர்ச்சியில் ஆர்வமுள்ளவர்



பெரிய புலம் மகாவித்தியாலயத்தில் குறுகிய கால சேவையாற்றியபோதும் அது மிகவும் சிறப்புற்றிருந்தமையை நான் அறிவேன். இப்பாடசாலைப் பழைய மாணவரான இவர் கல்வி வளர்ச்சியிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் பௌதீக வளங்களைப் பெருக்குவதிலும் ஆர்வமுள்ளவராக இருந்தார். கற்பிக்கும் காலத்தில் ஒரு புகழ்பூத்த ஆசிரியராக இருந்தவர். அவரது ஓய்வுக்காலம் சிறக்க எல்லாம் வல்ல மகா கணபதியைப் பிரார்த்திக்கின்றேன்.

**கே.வி.குணசேகரம்,**
கோட்டக்கல்விப் பணிப்பாளர், கோப்பாய், நல்லூர்க் கோட்டம்.

### நல்லதொரு பண்பாளன்



அமெரிக்க மிசனறியினரால் உருவாக்கப்பட்டு 184 அகவை கண்ட இப்பாடசாலையைத் திறம்பட நடத்திய மதிப்பிற்குரிய தி.கிருஷ்ணகுமார் அவர்கள் இப்பாடசாலை பழைய மாணவர். அவரது பண்பு, அடக்கம் அவரை பாடசாலையில் மட்டுமன்றி சமுதாயத்திலும் நல்லதொரு பண்பாளனாகக் காட்டியது. அவரது ஓய்வுக் காலம் சிறப்புற வாழ்த்துகிறேன்.

பழைய மாணவர் **திரு.ந.சச்சிதானந்தன்,**
செயற்பாட்டு முகாமையாளர், இலங்கை வங்கி, யாழ்.

### வாழி நீயும் பல்லாண்டு



எமது பாடசாலை முதல்வர் திரு.தி.கிருஷ்ணகுமார் சிறந்த கல்விமான், நல்லாசான். எவரையுமே புண்படுத்தாதவர். அன்பால் கடமையைச் செய்தவர். இவரது ஆளுமைப் பண்பு இவரை நல்லதொரு பண்பாளரென்பதைக் காட்டியது. ஆசிரிய சகோதரத்துவத்தை இணைத்ததுடன் பழைய மாணவர், பெற்றார், நலன்விரும்பிகள், கல்வி அதிகாரிகள் என்போரது ஆதரவுடன் சிறந்த முறையில் பணியாற்றி ஓய்வுபெற்றுள்ளார் இவரது ஓய் வுக் காலம் சிறக்க வாழ்த்துகிறோம்.

**திரு.சி.பத்மராசா J.P.**
தலைவர், ஆசிரிய உத்தியோகத்தர், நலன்புரிச்சங்கம்.

---


## வாழ்த்துகின்றோம்

**வாழ்க! வாழ்க! வாழ்க!**

தசாப்தங்கள் மூன்றாக தன்னிகரில்லா ஆசிரியத் தொழிலில்
தன்னை உவந்தீந்து, நல்லாசானாய்
நல்ல பல ஞான ஒளி ஏற்றி சேவையாற்றி
08.10.2007 அன்று நிறைவுற்று, ஓய்வுபெற்றுள்ள

**ஆசிரியர் திரு.ஆ.கனகரத்தினம்**



(67166)

அவர்களை இன்று இந்த சக்தி கடாட்ச நன்னாளில் பல்லாண்டு
காலம் நோய் நொடியற்று வாழ்க என பறாளாய் ஈசுவர
விநாயகரை இவன்கண் இறைஞ்சி நிற்கும்:

**ஆசிரிய நலன்புரிக் கழகம்,**
**சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.**


## பசுமை நிறைந்த நினைவின் 3ஆம் ஆண்டு நினைவலைகள்

*'உயிர்த்தெழச் செய்பவனும்*
*வாழ்வு தருபவனும் நானே'*

திருமதி

**பற்றிக் யோண்சன் பவஸ்ரினா** (குஞ்சு)



பூவுலகு
27✱12✱1970

விண்ணுலகு
19✱10✱2004

**இகத்தில் பிறந்து இனிதாய் வாழ்ந்து**
**இல்லக விளக்காய் ஒளியூட்டுவாய் என**
**பல்லோரும் நம்பியிருக்கும் வேளையில்**
**வாழ்க்கை எனும் ஓடம் தடம் புரள**
**தாழாத மனவேதனை தணியாத நோயுட்ட**
**அகலாத வேதனையில் அடி மனம் சோர**
**காலனவன் கவர்ந்திழுக்க**
**விண்ணுலகு சென்றுவிட்ட உன்னை**
**நினைக்கும் நாளிதுவே.**

இல.36, க்டற்கரை வீதி,
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (67170) ப.அருள்ராஜ்

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.19

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான அறநெறிப் போட்டிகள் நாளை சனிக்கிழமை தெரிவுசெய்யப்பட்ட 10 நிலையங்களில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் 2ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட ஆரம்பக் கல்வி மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (203-207)

✱ ✱ ✱

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆங்கில ஆசிரியர்களுக்கான 'யுனிசெவ்' அனுசரணையுடனான செயலமர்வு இன்றும் நாளையும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இச்செயலமர்வு காலை 8 மணி தொடக்கம் இடம்பெறும் என்றும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை செயலமர்வில் கலந்துகொள்ளும்படியும் வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (அ-1)

✱ ✱ ✱

கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவையின் ஆதரவுடன் அறவழிப் போராட்டக் குழுவால் வடமராட்சி, தென்மராட்சி ஆகிய இடங்களில் நடத்திய நீர்க்குழாய் பொருத்தல், அலுமினியம் பொருத்தல், வீட்டு மின் இணைப்புப் பயிற்சி ஆகியவற்றின்போது பயிலுநர்களால் உருவாக்கப்பட்ட பொருள்களின் கண்காட்சி நாளை சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நுணாவில் அறவழிஷூக்ஸ் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அறவழிப் போராட்டக் குழுத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் கலந்துகொள்வார். (203-207)


## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA *புறொயிலர் குஞ்சுகள் 19.10.2007 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.*

✱ராஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை
✱ரவி, சாவகச்சேரி
✱ராஜ் ஸ்ரோர்ஸ், பிரதான வீதி, நெல்லியடி
✱ஸ்ரீ வித்ஜா ரேடர்ஸ், அச்சுவேலி
✱மதுரா, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
✱திருமகள் களஞ்சியம், சிவலிங்கப்புளியடி
✱சிவம் ஸ்ரோர்ஸ், ஏழாலை
T.P.: 2223529, 2222367.

(68083)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/சங்கானை சிவப்பிரகாச மகா
வித்தியாலத்தைச்
*சேர்ந்த தரம் 5 மாணவி*

**செல்வி மனோஜா செல்வராசா**



அவர்கள் கடந்த புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்தி 161 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த பாடசாலை அதிபர், ஆசிரியர் ஆகியோருக்கும் மற்றும் யுப்பிட்டர் விளையாட்டுக் கழக முன்பள்ளி ஆசிரியை செல்வி வ.தர்மநிபலா, கேம்பிறிட்ஜ் கல்வி நிலைய ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களான செல்விகள் வ.தர்மபிரபா, வ.லெட்சுமிகாந்தன், செ.இராஜேஸ்வரி ஆகியோரை மனதார வாழ்த்துவதுடன் நன்றிகளையும் நல்கிச் சீரணிப் பதியுறை அருள்மிகு ஸ்ரீநாகபூஷணி அம்பாள் திருவருள் நலத்தால் செல்வி செ.மனோஜா மென்மேலும் கல்வியில் உயர்வு பெற்றுச் சாதனைகள் பல பெற்றிடச் சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அம்மம்மா, சித்தப்பா, அப்பா, அம்மா,
அத்தைமார், சித்திமார், பெரியப்பா,
மச்சாள்மார், மச்சான்மார், மாமிமார்.

தேவாலய வீதி,
சங்கானை. (67971)


## திருமறைக் கலாமன்றம்
## கலைத்தூது அழகியல் கல்லூரி
## KALAITHUTHU COLLEGE OF AESTHETICS

### விண்ணப்பங்கள் கோரல்

எமது கல்லூரியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பின்வரும் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ **யோகாசனம்** *(நான்கு மாதப் பயிற்சி)*

★ **ஆங்கில வகுப்புகள்** *(ஆறு மாதப் பயிற்சி)*
- உயர்தர, பட்டதாரி மாணவர்கள் மற்றும் பணிபுரிவோருக்கானது

★ **தையல் கலை** *(மூன்று மாதப் பயிற்சி)*
- சாறி பிளவுஸ், சுரிதார் உட்பட பெண்கள் சிறுவர்களுக்கான ஆடைகள்

★ **அழகுக் கலை** *(Beauty Culture)*
- முக ஒப்பனை, மணப்பெண் அலங்காரம், சாறி வேர்க்ஸ், பெயின்ரிங், கேக் ஐசிங்

• இவற்றுடன் ஏனைய நுண்கலை வகுப்புகளுக்கும் விண்ணப்பிக்கலாம். மேலதிக விவரங்களுக்கு கல்லூரி அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

128, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி.: 222 9419

**அதிபர்,**
**கலைத்தூது அழகியல் கல்லூரி,**
**திருமறைக் கலாமன்றம்.**

(RP54030)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி: 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

## கருத்து வெளியிடும் சுதந்திரம் பறிக்கப்படும் மோச நிலை

கருத்து வெளியிடும் சுதந்திரம், ஊடக சுதந்திரம் போன்றவை தொடர்பில் இலங்கைத் தேசத்தின் உண்மை நிலையை சர்வதேச மதிப்பீட்டு ஆய்வு ஒன்று அம்பலப்படுத்தியிருக்கின்றது.

ஊடக சுதந்திரத்திற்காக அயராது குரல் எழுப்பிவரும் சர்வதேச அமைப்பான - பாரிஸை மையமாகக் கொண்டு இயங்குகின்ற - 'எல்லைகளற்ற பத்திரிகையாளர்கள் அமைப்பு' என்ற நிறுவனம் 169 நாடுகளில் மேற்கொண்ட ஆய்வுகளின் பெறுபேறுகள் இலங்கையின் மோசமான நிலையை வெட்ட வெளிச்சமாக்கியிருக்கின்றன.

பத்திரிகைச்சுதந்திரம் மேன்மையான - முதலாவது - இடத்தில் இருப்பது பற்றிய பெருமை ஐஸ்லாந்துக்குக் கிடைத்திருக்கின்றது. கடைசி - 169 ஆவது இடம் - எரித்திரியாவுக்கு.

இலங்கை 156 ஆவது இடத்தில் - பின்னிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது. மோசமான பத்திரிகைச் சுதந்திரம் உள்ள நாடுகளின் வரிசையில் கடைசி இருபதுக்குள் இலங்கை நிறுத்தப்பட்டிருக்கின்றது.

ஈராக், பாலஸ்தீனப் பிரதேசங்கள், சோமாலியா, உஸ்பெஸ்கிஸ்தான், லாவோஸ், வியட்நாம், சீனா, பர்மா(மியன்மார்), கியூபா, ஈரான், துருக்மெனிஸ்தான், வடகொரியா, எரித்திரியா அகியவையே இவ்விடயத்தில் இலங்கைக்குப் பின்னால் நிற்பவை.

இந்த வரிசையில் கடந்த நான்கு ஆண்டு காலத்துக்குள் மோசமான வீழ்ச்சி நிலையை இலங்கை காட்டி வருவதும் அவதானிக்கத்தக்கது.

2004 ஆம் ஆண்டில் 110 ஆவது இடத்தில் இருந்த இலங்கை 2005 ஆம் ஆண்டில் - ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் 115 ஆம் இடத்துக்கு சரிந்தது.

ஆனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி அதிகாரம் ஆரம்பமானதும் நாட்டின் ஊடக சுதந்திரம் - சர்வதேச மட்டத்துடன் ஒப்பிடுகையில் - பெரு வீழ்ச்சி கண்டது. கடந்த ஆண்டு 141 ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்ட இலங்கை இந்த ஆண்டில் மேலும் கீழிறங்கி 156 ஆவது நிலைக்கு வந்திருக்கின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு ஊடக சுதந்திரத்துக்கு அளித்துவரும் உயர் நிலையின் 'சீத்துவத்தை' இந்த மதிப்பீட்டு ஆய்வுகள் துல்லியமாக வெளிப்படுத்தி நிற்கின்றன.

எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பு இந்த மதிப்பீட்டு ஆய்வைப் பரந்தளவில் மேற்கொண்டது. கருத்துச் சுதந்திர வெளிப்பாட்டு உரிமை தொடர்பான பதினைந்து சர்வதேச அமைப்புகள் மற்றும் தனது செய்தியாளர்கள், ஊடகவியலாளர்கள், ஆய்வாளர்கள், ஜூரிகள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் என சுமார் 130 பிரதிநிதிகள் ஆகிய தரப்புகள் ஊடாக இந்த ஆய்வை அது மேற்கொண்டது என்பது கவனிக்கத்தக்கது.

இதேசமயம், இலங்கையில் கருத்து வெளியிடும் சுதந்திரத்தை - ஊடக சுதந்திரத்தை - மதிக்குமாறு 32 சர்வதேச அமைப்புகள் ஒன்று கூடி வலியுறுத்தியிருக்கின்றன. உருகுவேயின் மொண்டிவிடியோ நகரில் 'கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் பற்றிய சர்வதேச கலந்துரையாடல்' மாநாடு இடம்பெற்றது. கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்துக்காகப் போராடும் 32 சர்வதேச அமைப்புகள் இந்த மாநாட்டில் பங்குகொண்டு பல்வேறு நாடுகளிலும் ஊடக சுதந்திர நிலைமையை ஆராய்ந்தபின்னர் பொது அறிக்கை ஒன்றை வெளியிட்டன. அதிலேயே மேற்படி கோரிக்கை இலங்கைக்கு விடுக்கப்பட்டிருக்கின்றது.

இதற்கிடையில், இலங்கையில் ஊடக சுதந்திரம் மோசமாக நசுக்கப்பட்டு வருவதை - அரசுத் தரப்பினாலும் அதிகாரிகளினாலும் உத்தியோகப்பற்றற்ற தணிக்கையும், ஊடகங்களுக்கு எதிரான அழுத்தமும் பிரயோகிக்கப்பட்டு வருவதை - தொடர்ந்து சுட்டிக்காட்டிக் கண்டனம் தெரிவித்து வருகின்றது இலங்கையின் ஊடக சுதந்திரத்துக்கான காவல் அமைப்பான சுதந்திரஊடக இயக்கம்.

கடைசியாக இரு பத்திரிகைப் புகைப்படப்பிடிப்பாளர்கள் இராணுவத்தினரால் கெடுபிடிக்குள்ளாக்கப்பட்டு அவர்கள் பிடித்த படங்கள் படையினரால் அழிக்கப்பட்டமையை சுதந்திர ஊடக இயக்கம் குறிப்பாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

தேசிய பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்கும் என்ற காரணத்தைக் காட்டிப் பல்வேறு இராணுவ அதிகாரிகளினாலும் மேற்கொள்ளப்படும் இத்தகைய அத்துமீறல்கள், இலங்கையில் அப்படி ஒன்றும் உத்தியோகப்பற்றற்ற தணிக்கை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று திரும்பத் திரும்ப அரசுத் தரப்புக் கூறி வருவது தவறானது என்பதையே ஊர்ஜிதப்படுத்தி நிற்கின்றன. ஊடக சுதந்திரத்தை நசுக்கும் இத்தகைய எல்லை மீறிய செயற்பாட்டுக்கு அரசு அனுமதி வழங்கி நிற்பது இந்த நாட்டில் ஜனநாயக நல்லாட்சிக்கு ஊறுவிளைவிப்பதாகவே அமையும் என்பதை அரசு உணர்ந்துகொள்ள வேண்டும் என்றும் சுதந்திர ஊடக இயக்கம் சுட்டிக்காட்டி உள்ளது.

கருத்துச் சுதந்திரத்தை வெளிப்படுத்துவதற்கான உரிமையை மதித்துப் பேணும் நாடுகளின் வரிசையில் இலங்கையின் தரம் மோசமடைந்து கீழிறங்கி இருப்பதை உணர்த்தும் புள்ளிவிவரங்களும் -

கருத்துச் சுதந்திரத்தை மதிக்குமாறு இவ்விவகாரம் தொடர்பான சர்வதேச மாநாடு, இலங்கையை வற்புறுத்திக் கோரியிருப்பதும் -

ஜனநாயக நல்லாட்சிக்கு அபாயம் விளைவிக்கும் வகையில் படை அதிகாரிகள் தம்பாட்டில் ஊடகங்கள் மீது அழுத்தங்களைப் போட்டு வருகிறார்கள் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் அம்பலப்படுத்தியிருக்கின்றமையும் -

இலங்கைத் தீவில் ஊடக சுதந்திரம் கொஞ்சம் கொஞ்சமாக செத்து வருவதையே வெளிப்படுத்துகின்றன.

''நாட்டில் ஒரு யுத்தம் இடம்பெறுவதால் யுத்தத்துக்கு மத்தியில் மனித உரிமைகள் மீறப்படுகின்றமை தவிர்க்க முடியாததே.'' - என்று தனது நிர்வாகத்தின் கீழ் மனித உரிமைகள் மோசமாக மீறப்படுகின்ற நிலைமையை நியாயப்படுத்த முயலும் இந்த அரசு, கருத்துவெளியிடும் சுதந்திரம் மோசமான அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கின்றமையையும் அதே யுத்த நிலைமையைக் காரணம்காட்டி நியாயப்படுத்த முயன்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

''இலங்கையில் இதுவரை இருந்த ஜனாதிபதிகளில் செய்தித் தணிக்கையை நடைமுறைக்குக் கொண்டுவராத ஒரேயொரு ஜனாதிபதி நான்தான்!'' - என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவ்வப்போது தம்பட்டம் அடித்து - தற்பெருமை பேசி - பீற்றிக் கொண்டாலும் கூட, இவரது ஆட்சி நிர்வாகத்தில்தான் கருத்து வெளியிடும் சுதந்திரம் மோசமாக சூறையாடப்பட்டு, அச்சுதந்திரம் பறிக்கப்பட்டது என்பது தேசிய மட்டத்திலும் சர்வதேச ரீதியிலும் அம்பலமாகி வருகின்றது.

செய்தித் தணிக்கையை - கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை - நசுக்கும் செயற்பாட்டை - சட்டரீதியாகவன்றி, சட்ட முறையற்ற வகையிலும் நடைமுறைப்படுத்துவதில் கைதேர்ந்தது இந்த ஆட்சி நிர்வாகம் என்பதை அம்பலப்படுத்துவனவாகவே இந்தப் பெறுபேறுகள் அமைந்திருக்கின்றன. மஹிந்தரின் ஆட்சிக்குக் கிடைத்த மற்றொரு 'நற்சான்றிதழ்' இந்த மதிப்பீட்டு ஆய்வின் முடிவுகளாகும்.

## 'ரெலிகொம்'மின் தொலைபேசிக் கட்டணங்கள் நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் குறைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 19

'ரெலிகொம்' நிறுவனத்தின் தொலைபேசிக் கட்டணங்கள் நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் குறைக்கப்படவிருக்கின்றன.

இலங்கை தொலைத் தொடர்புகள் ஆணைக்குழு புதிய கட்டணங்களை அண்மையில் நிர்ணயித்துள்ளது.

அதனைத் தொடர்ந்து புதிய கட்டணங்கள் 'ரெலிகொம்' நிறுவனம் அறிவித்துள்ளன. அந்த விவரங்கள் வருமாறு:

* ரெலிகொம் தொலைபேசியிலிருந்து மற்றொரு ரெலிகொம் தொலைபேசிக்கு மாவட்ட குறியீடு பயன்படுத்தாது ஏழு இலக்கங்களை அழுத்தி அழைப்பு பெறும்போது உச்சநேரத்துக்கு 2 ரூபா 80 சதமும் சிக்கன நேரத்துக்கு 1 ரூபா 40 சதமும் கழிவு நேரத்துக்கு 50 சதமும் அறவிடப்படும்.

* இரண்டு மாவட்டங்களுக்கு இடையில் பத்து இலக்கங்களை அழுத்தி அழைப்புப் பெறும்போது, உச்சநேரத்துக்கு 4 ரூபாவும், சிக்கன நேரத்துக்கு 2 ரூபாவும் கழிவு நேரத்துக்கு 50 சதமும் அறவிடப்படும்.

* இலங்கை ரெலிகொம் தொலைபேசியிலிருந்து ஏனைய நிறுவனங்களின் தொலைபேசிக்கு எடுக்கப்படும் அழைப்புகளுக்கு - மாவட்டத்திற்குள் உச்ச நேரத்து 3 ரூபா 20 சதமும், சிக்கன நேரத்துக்கு 1 ரூபா 20 சதம் கழிவு நேரத்துக்கு 50 சதமும் அறவிடப்படும்.

* அதே வகையில் வெளிமாவட்டங்களுக்கு உச்சநேரத்துக்கு 4 ரூபா 60 சதமும் சிக்கன நேரத்துக்கு 2 ரூபா 30 சதமும் கழிவு நேரத்துக்கு 50 சதமும் அறவிடப்படும்.

* இலங்கை ரெலிகொம் தொலைபேசியிலிருந்து கையடக்க தொலைபேசிகளுக்கு எடுக்கப்படும் அழைப்புகளுக்கு - உச்ச நேரத்துக்கு 4 ரூபா 60 சதமும் சிக்கனநேரத்துக்கு 2 ரூபா 30 சதமும் கழிவு நேரத்துக்கு 50 சதமும் அறவிடப்படும்.

* உச்ச நேரம் என்பது திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 7 மணிமுதல் மாலை 6 மணி வரையுமாகும். சிக்கன நேரம் என்பது அதிகாலை 5 மணிமுதல் காலை 7 மணி வரையும் மற்றும் மாலை 6 மணியில் இருந்து இரவு 9 மணிவரையும்.

கழிவு நேரம் என்பது இரவு 9 மணியில் இருந்து அதிகாலை 5 மணிவரையும் ஆகும்.

* ஞாயிற்றுக்கிழமைகளிலும் பொது விடுமுறை நாள்களிலும் காலை 5 மணி முதல் இரவு 9 மணிவரை சிக்கன காலமாக கருதப்படும். (அ-86)

## யாழ். நகரப் பகுதியில் டெங்கு பரவும் அபாயம்; கடந்த 17 நாள்களில் 16 பேர் சிகிச்சைக்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்குக் காய்ச்சல் அபாயம் அதிகரித்துள்ளது. இம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரை 16 பேர் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் தெரிவித்தார்.

டெங்குக் காய்ச்சல் மேலும் பரவுவதைத் தடுப்பதற்காக யாழ். மாநகரப் பகுதிக்குள் வசிக்கும் மக்கள் தமது வீடுகளுக்கு அண்மையில் உள்ள பற்றைகள், நீர் செல்லும் வாய்க்கால்கள் என்பனவற்றை துப்புரவு செய்யுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் யாழ். மாநகரப்பகுதியில் மூன்று பேரும் செப்ரெம்பர் மாதத்தில் 7பேரும் ஒக்ரோபர் மாதத்தில் கடந்த 17ஆம் திகதி வரை 16 பேரும் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது. இனங் காணப்பட்ட இடங்களில் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

குருநகர் பிரதேசத்தில் மத்தியூஸ் வீதி, பங்ஷால் வீதி ஆகிய இடங்களிலும் அரியாலைப் பிரதேசத்தில் புங்கான்குளம் நாவலர் வீதி, 3ஆம் குறுக்குத் தெரு, ஏ.வி.றோட் ஆகிய இடங்களிலும் நல்லூரில் இராச வீதியிலும் யாழ். நகரில் இராசாவின் தோட்டம் பகுதியிலும் வண்ணார் பண்ணைப் பிரிவில் மானிப் பாய் வீதி, அத்தியடி, இராமநாதன் வீதி, நாவாந்துறை, சிவகுருநாதர் வீதியிலும் டெங்குத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

அதனையடுத்து இப்பகுதியில் உள்ள ஆள்கள் இல்லாத 84 வீடுகளில் இருந்த பற்றைகள் அழிக்கப்பட்டன. அத்துடன் கழிவு நீர் வாய்க்கால்களும் சுத்திகரிக்கப்பட்டதுடன் புகையூட்டும் நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன.

இது வரை டெங்குக் காய்ச்சல் காரணமாக இருவர் உயிரிழந்துள்ளனர். கடந்த ஓகஸ்ட் 28 ஆம் திகதி குருநகர் மத்தியூஸ் வீதியைச் சேர்ந்த 9 வயதுச் சிறுவன் ஒருவனும், கடந்த செப்ரெம்பர் 25 ஆம் திகதி வளன்புரம் பகுதியில் ஒன்றரை வயதுச் சிறுமி ஒருவரும் டெங்குக் காய்ச்சலால் உயிரிழந்துள்ளனர்.

டெங்குக் காய்ச்சலை மாநகரப் பகுதிகளில் தடுப்பதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் தற்போது தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார். (அ-50)

## வெள்ளி தோறும் மணிமண்டபத்தில் அன்னதானம்

யாழ்ப்பாணம், ஒக். 19

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மேற்கு வீதியில் அமைந்துள்ள துர்க்கா மணி மண்டபத்தில் இன்றுமுதல் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நண்பகல் 12 மணிக்கு விசேட அன்னதானம் வழங்கப்படவிருக்கின்றது.

நல்லைக்கந்தனை வழிபட வரும் பக்தர்கள், ஆலயச் சூழலில் வாழும் அன்பர்கள் ஆகியோருக்கு உதவும் நோக்குடன் நடத்தப்படும் இந்த அன்னதானத்தை துர்க்காதேவி தேவஸ்தானம் ஒழுங்கு செய்துள்ளது.

தூர இடங்களில் இருந்து நல்லூர்க் கந்தன் ஆலயத்துக்கு வரும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்படவில்லை என்ற நீண்ட நாள் குறைப்பாட்டை நீக்கும் வகையில் இந்த ஏற்பாடு அமைகிறது.

அன்னதானத்துக்கு உதவவிரும்புபவர்கள் துர்க்காதேவி தேவஸ்தானத்துடன் தொடர்புகொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

## புங்குடுதீவில் வர்த்தகர் புதனிரவு சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஒக். 19

புங்குடுதீவு, 10ஆம் வட்டாரத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 7 மணியளவில் வர்த்தகரான குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பத்மநாதன் (வயது 52) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

ஊர்காவற்றுறை பதில் நீதிவான் மு. திருநாவுக்கரசு சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

தமது வீட்டுக்கு அருகில் பலசரக்குக் கடை நடத்தி வந்த இவர், வீட்டில் இருந்தபோதே இனந்தெரியாத ஆயுததாரிகள் அவரை சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

## பத்திரிகைச் சுதந்திரம் மோசமாகியுள்ள நாடுகளில் இலங்கை; 156ஆவது இடம்

பாரிஸ், ஒக். 19

சர்வதேச அளவில் ஊடக சுதந்திரம் மறுக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இடம்பெற்றுள்ளது.

எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பின் சார்பில் ஊடக சுதந்திரம் தொடர்பிலான ஆய்வு நடத்தப்பட்டது. மொத்தம் 169 நாடுகளில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. ஊடக சுதந்திரம் தொடர்பாக 50 கேள்விகளில் அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

169 நாடுகளில் ஊடக சுதந்திரம் மறுக்கப்பட்ட 20 நாடுகளில் இலங்கையும் இடம்பெற்றுள்ளது. இப்பட்டியலில் இலங்கை 156ஆம் இடத்திலும் சோமாலியா 159 ஆம் இடத்திலும் எரித்திரியா 169ஆம் இடத்திலும் உள்ளன.

பத்திரிகைச் சுதந்திரம் மோசமான நிலையில் உள்ள 20 நாடுகளில் இலங்கையும் அடங்குகிறது.

பாகிஸ்தான், லாவோஸ், வியட்நாம், சீனா, பர்மா, வட கொரியா ஆகியனவும் அதேவகை யில் சேர்ந்துள்ளன. (அ)

## மொறவெவவில் காணாமற்போன ஜப்பானியர் உட்பட அறுவர் மீட்பு

கொழும்பு, ஒக். 19

திருகோணமலை, மொறவெவ, மகலுவெவப் பகுதியில் நேற்றுமுன்தினம் முதல் காணாமல் போயிருந்த இரு ஜப்பானியர்கள், நீர்ப்பாசன அதிகாரிகள், பொறியியலாளர்கள் ஆகிய 6 பேர் நேற்றுக்காலை பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.

கைவிடப்பட்ட நிலையில் உள்ள குளம் ஒன்றை நிர்மாணிப்பது தொடர்பில் அதனைப் பார்வையிடுவதற்காக நெலும்பவத் காட்டுப்பகுதிக்கு நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் சென்றபோது அங்கு அவர்கள் வழி தவறி வேறு திசைக்குச் சென்றுவிட்டனர். இவர்களை காணாத நிலையில் படையினர்நேற்றுக்காலை மேற்கொண்ட தேடுதலில் 6 பேரும் கண்டுபிடிக்கப்பட்டனர்.

இவர்கள் குறித்த காட்டில் நேற்றுமுன்தினம் இரவு முழுவதும் நின்றநிலையில் கண்களை மூடிக்கொண்டு இராப்பொழுதைக் கழித்தனர் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த 6 பேரும் தற்போது மொறவெவ பொலிஸிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றனர். (சி)

## மாவைக் கந்தன் ஆலய ஐப்பசி வெள்ளித் திருவிழா

யாழ்ப்பாணம், ஒக். 19

மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலில் ஐப்பசி வெள்ளிக் கிழமைகளின் விசேட பூசைகள் மற்றும் திருவிழாக்கள் நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

இந்தப் பூசை வழிபாடுகளில் பக்தர்கள் கலந்துகொண்டு தமது நேர்த்திக் கடன்களை நிறைவுசெய்யும் பொருட்டு, போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக ஆலய தர்மகர்த்தாவும் பிரதம குருவுமான மஹா ராஜஸ்ரீ சு.து.சண்முகநாதக் குருக்கள் தெரிவித்தார். இன்று முதலாவது ஐப்பசி வெள்ளி நாளாகும்.

ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்களை தெல்லிப்பழை சோதனை நிலையத்துக்கு மு.ப. 9.30 மணிக்கு முன்னர் வருமாறும் அதற்கேற்றவாறே வாகன ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

ஆலய தரிசனம், பூசை வழிபாடுகள் பூர்த்திசெய்து கொண்டு மகேஸ்வர பூசையின் பின்னர் பி.ப. 1.30 மணிக்கு கோயிலில் இருந்து திரும்ப முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ)

### நாளை

| | |
|---|---|
| ஐப்பசி - 03 : | சனிக் கிழமை 20.10.2007 |
| திதி : நவமி | முன்னிரவு 09.11 |
| நட்சத்திரம் : | திருவோணம் பின்னிரவு 02.13 |
| சுபநேரம் | : 03.02 - 04.32 |
| ராகுகாலம் | : 09.02 - 10.32 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடையாள அட்டைக்கான படிவங்களை 31 ஆம் திகதிக்கு முன் கையளிக்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 19

விசேட அடையாள அட்டைக்கான விண்ணப்பப்படிவங்களை இதுவரை கையளிக்காதவர்கள் அவற்றை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன் அருகில் உள்ள இராணுவ முகாமில் அல்லது கிராமசேவை யாளரிடம் கையளிக்க வேண்டும்.

பலாலி பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகம் மேற்கண்ட அறிவுறுத்தலை நேற்றிரவு விடுத்துள்ளது.

பத்து வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் விசேட அடையாள அட்டை வழங்குவதற்கான விண்ணப்பபடிவங்கள் படையினரால் விநியோகிக்கப் பட்டுள்ளன.

அந்தப் படிவங்களை முறைப்படி நிரப்பி மீண்டும் இராணுவத்தினரிடம் கையளிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. எனினும் பலர் இன்னமும் மீளக் கையளிக்கவில்லை என்பது தெரிய வந்துள்ளது.

கையளிக்காதவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்குமுன் கையளிக்குமாறு கேட்கப்படுகின்றறீர்கள் என்று படைத் தலைமையகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

## எரிக் சொல்ஹெய்முக்கு அமைச்சுப் பதவி மாற்றம்

நோர்வேயின் அபிவிருத்திச் சபை அமைச்சர் பதவியில் இருந்து எரிக்சொல்ஹெய்ம் மாற்றப்பட்டுள்ளார். இந்தத் தகவலை நோர்வேயின் உத்தியோகபூர்வ வானொலி நேற்று வெளியிட்டது.

எரிக் சொல்ஹெய்ம் தற்போது சுற்றுச் சூழல் அமைச்சராக மாற்றப்பட்டிருக்கின்றார்.

அந்த நாட்டு சுற்றுச்சூழல் அமைச்சராக இருந்தஹெலென் ப்ஜோர்னி மீது சூழலியலாளர்கள் கடும் விமர்சனங்களை முன்வைத்ததைத் தொடர்ந்து இப் பதவி மாற்றம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

## புத்தளம் பகுதியில் சடலம் மீட்பு

புத்தளம், ஒக்.19

புத்தளத்திலுள்ள தனியார் உப்பளத்தின் கால்வாயிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. தலை கவிழ்ந்த நிலையில் கிடந்த இந்தச் சடலம் சுமார் 45 வயது மதிக்கத்தக்கவரது - என்று தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 2 அல்லது 3 தினங்களுக்கு முன்னர் கால்வாயில் வீழ்ந்து உயிரிழந்திருக்கலாம் என்று தெரிவிக்கும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## புளியங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுச் சோதனைச் சாவடி திறக்கப்படாததால் பயணத்துக்காக வந்த மக்கள் கோயில்களிலும், மர நிழல்களிலும் தங்கியிருந்தனர். மக்கள் மழையினால் பெரும் இடர்பாடுகளையும் எதிர்நோக்கியுள்ளனர் எனவும் கூறப்படுகிறது. (சி)

## பயங்கரவாதத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றது. அங்கு தேர்தலை நடத்தி ஒரு ஜனநாயக சூழலை உருவாக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

பயங்கரவாதத்தின் உச்சக்கட்டம் அதன் பாரிய தாக்கம் செப்ரெம்பர் 11 தாக்குதலின் போதுதான் சர்வதேசத்தால் நன்கு உணரப்பட்டது. அன்றுமுதல் இன்றுவரை சர்வதேச நாடுகள் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டப் போராடி வருகின்றன.

பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட சர்வதேச நாடுகள் திடசங்கற்பம் பூண்டுள்ளன என்பதற்கு இந்த சர்வதேச மாநாடு நல்ல தொரு எடுத்துக்காட்டு என்றார்.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் பாலித கொஹென்ன,

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வு காண்பதில்லை என்றும்- அரசியல் தீர்வே இறுதித்தீர்வு என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியாக இருக்கின்றார்.

கைப்பற்றப்பட்ட கிழக்கில் தேர்தலை நடத்தி ஜனநாயகத்தை நிலைநாட்ட அவர் திட்டம் தீட்டியுள்ளார்- என்றார்.

பயங்கரவாதத்தை எதிர்க்கும் சர்வதேச மாநாடு நேற்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தொடக்கிவைக்கப்பட்டது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம இம்மாநாட்டைத் தொடக்கிவைத்து உரையாற்றினார்.

இம்மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ, வீ.ஆனந்த சங்கரி, அமைச்சர்கள் நிமால் ஸ்ரீபாலடி சில்வா, டிலான் பெரேரா ஆகியோர் உட்பட பலநாடுகளைச் சேர்ந்த இராஜதந்திரிகளும் கலந்துகொண்டனர்.

இந்த மூன்று நாள் மாநாடு இன்றும் நாளையும் தொடர்ந்து இடம்பெறும்.

இதில்இலங்கைப் பிரதிநிதிகளும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் பயங்கரவாதம் ஒழிக்கப்படுவதன் அவசியம் பற்றி உரையாற்றுவர். (சி)

## வவுனியாவில் நேற்றிரவு கிராம சேவையாளர் சுட்டுக்கொலை

வவுனியா, ஒக். 19

வவுனியா, தோணிக்கல் பகுதியில் நேற்றிரவு 8 மணியளவில் கிராமசேவையாளர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த எஸ்.குமாரசாமி (வயது 47) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

வீட்டில் அவர் இருந்த வேளை அங்கு வந்த ஆயுததாரிகள் அவரைச் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுவிட்டனர்.

சடலம் மரண விசாரணைகளுக்காக வவுனியா ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (அ-1)

## ஈழத் தமிழர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று கிருஷ்ணசாமி கோரியிருந்தார்.

அண்மையில் புதிய தமிழகம் கட்சி ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக சென்னையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருந்தது. (அ-1)

## பட்டப்பகலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்தார்.

தனது மகளையும் கணவரையும் பார்ப்பதற்காக தனது மகனுடன் கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

திருநெல்வேலியில் உறவினரின் வீடு ஒன்றில் தங்கியிருந்த வேளையில் புதன் கிழமை காலையில் கடத்தப்பட்டுள்ளார்.

அநாதரவான நிலையில் அவரது பாடசாலை மாணவியான மகளும் 4 வயது மகனும் தமது தாயை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடமும் படை அதிகாரிகளிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர். ஆணைக்குழுவில் செய்த முறைப்பாட்டில் இந்தக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டுள்ளது. இதேவேளை -

சரணடைந்து சிறைச்சாலையில் உள்ள கடத்தப்பட்ட பெண்ணின் கணவனும், தமது மனைவியை விடுவித்து பிள்ளைகளைப் பராமரிக்க உதவுமாறு கேட்டுள்ளார். (அ 1-50-202)

## ஓமந்தை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. அதனால் அந்தப் பாதை ஊடான போக்குவரத்து தடைப்பட்டது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் பாதுகாப்புப் படைத்தரப்புடனும் விடுதலைப் புலிகள் தரப்புடனும் நேற்று பேச்சுக்கள் நடத்தினர்.

இருதரப்புக்களும் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கியதை அடுத்து மீண்டும் இன்று அவர்கள் பணியில் ஈடுபடுவர் என செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ-1)

## அகதிகள் படகு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸிமஸ் புஸ்பமாலா (வயது 36) அவரது பிள்ளைகளான மிருசினி (வயது 8), நிலக்ஷன் (வயது 10) ஆகியோர் காயமடைந்த நிலையில் மன்னார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தமது கணவரான ஜிம் நெக்ஸிமஸ் சம்பவம் நடந்த வேளை கடலில் குதித்து நீந்தி கடற்படையினருக்கு விவரம் தெரிவிக்க சென்றார் என்றும், பின்னர் அவர் குறித்து தகவல் ஏதுவும் கிடைக்கவில்லை என்றும் காயமுற்று மன்னார் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ள புஷ்பமாலா நெக்ஸிமஸ் தெரிவித்தார்.

தனது கணவரும், 4 பிள்ளைகளும், தனது மாமனாரும் இந்தப் படகில் தன்னுடன் பணயஞ் செய்ததாகவும் கரையை அடைந்து விட்டதாக எண்ணி தாம் மன்னார் கடற்பரப்புக்குள் நுழைந்துவிட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தாம் அகதிகள்தான் என்பதை தெரிவிக்குமுகமாக, வெள்ளைக் கொடியைக் காட்டியபோதும் அதனை பொருட்படுத்தாமல், படையினர் தம்மீது தாக்குதல் நடத்தியதாகவும் அவர் அழுத வண்ணம் கூறினார்.

ஆனால் விடத்தல்தீவுப் பகுதியில் இருந்து வந்த படகுகள், தமது ரோந்துப் படகுகள் மீது தாக்குதல் நடத்தியதை அடுத்தே கடற்படை பதில் தாக்குதலை நடத்தியதாக இலங்கை இராணுவத்தின் சார்பில் அதன் பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

குடும்பத் தலைவரான ஜிம் நெக்ஸிமஸ் நீந்திக் கரைசேர்ந்தாரா அல்லது மரணமானாரா என்பது குறித்து நேற்று நள்ளிரவு வரை தகவல் எதுவும் வெளியாகவில்லை.

இதேவேளை-

படகுகளை நிறுத்துமாறு சமிக்ஞை கொடுத்தபோதும், படகு நிறுத்தப்படாமையாலேயே அதன் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேர்ந்தது என்றும் கடற்படைப் பேச்சாளர் கொமடோர் டி.கே.பி. தஸநாயக்க நேற்றிரவு தெரிவித்தார்.

ஆனால் இச்சம்பவம் குறித்து அவர் நேற்று நண்பகல் பின்வருமாறு கூறியிருந்தார்.

''பேசாலை கடற்பரப்பில் சென்று கொண்டிருந்த சந்தேகத்துக்கிடமான படகை கடற்படையினர் நிறுத்துமாறு கேட்டுக்கொண்டனர். அப்போது அந்தப் படகிலிருந்து கடற்படையினரை நோக்கி தாக்குதல் தொடுக்கப்பட்டது. அதன் பின்னரே கடற்படையினர் திருப்பித் தாக்கினர். தாக்குதல் முடிந்த பிறகு அந்த இடத்துக்குச் சென்ற கடற்படையினர் குறித்த படகிலிருந்து சடலங்களையும் காயமடைந்த நிலையில் மூவரையும் மீட்டனர்'' - என்றார். (அ-1)

CB Computer Academy
Station Road, Kondavil. 021-4590291
புதிய பிரிவுகள் ஆரம்பம்!!
20.10.07 (Sat)
Diploma in DTP & Graphics Design
IT for Bankers [for ACBF Candidates]
Kid's Programmes (Grade 1-8)

நவராத்திரி கால கோலாகலம்
ஒவ்வொரு கணினியுடனும்
With Each Pcs
1 Gb FlasH /UPS/ /PrinteR/ ScanneR
FREE
5-10% for All Products
நல்ல நேரத்தில் உங்கள் கணினியை பெற முன்பதிவு செய்யுங்கள்
3 Years Replacement/Service Warranty
கடைசி நேர ஏமாற்றத்தை தவிர்க்க முந்துங்கள்
இன்னும் பல சலுகைகள் விபரங்கள் நேரில்
Computer Accessories, Woofers, DVD Players, Intelligent, Sound & Game & Pointing Devices & etc
வெள்ளி, சனி, ஞாயிறு வரை மட்டுமே
UNIT மனோகரா சந்தி
347, K.K.S Road, Jaffna
4590720, 0773134737

அறிவொளி NALLUR
A/L 07 துரிதமீட்டல் நடைபெறுகிறது
CHE. :- அன்பு
Sat., Sun.- 3.30 p.m
Bio. :- அல்போன்ஸ்
Sat., Sun.- 2.30 p.m
Phy. :- K.செல்வன்
Wed., Fri.- 3.30 p.m
C.maths :- சிவகரன்
Wed, Fri. - 4.30 p.m
புதிய பிரிவுகள்
G.A.Q., B.A (யாழ்., பேராதனை)
தமிழ் M.சுரேஸ்
இ/நாகரிகம் K.சத்தியநாதன் - M.R.
புவியியல் கிருஷ்ணா
அரசறிவியல் திருமுருகன்
மெய்யியல் ராம்
நாடகம் மங்களேஸ்
ஆரம்பம் - 20.10.2007 சனி 1.p.m
திகழ் கல்வி நிறுவனம்
K.K.S. வீதி, இணுவில்.

S.L.A.S. பரீட்சைகள் விசேட வகுப்புகள்
பிரிவு- I சனி, ஞாயிறு :- 1.00 - 3.00
பிரிவு- II சனி, ஞாயிறு :- 3.30 - 5.30
ஆரம்பம் 20.10.2007 சனி. பொது அறிவு, பொது உளச்சார்பு, கட்டுரையும் சுருக்கமும், முகாமைத்துவ உளச்சார்பு, கையேடுகள், கடந்த கால வினாப்பத்திரங்கள் இங்கு கிடைக்கும்.
திகழ் கல்வி நிறுவனம்
K.K.S. வீதி, இணுவில்.

பரீட்சை வினாத்தாள்
நாவலர் வெளியீட்டின் 3 ஆம் தவணைக்கான தரம் 1 முதல், O/L வரைக்கான வினாத்தாள் தேவைப்படும் கல்வி நிலையங்கள் பிரத்தியேக வகுப்புகள் மட்டும்.
24.10.2007இற்கு முன் தொடர்பு கொள்ளவும்.
நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.P:- 0773 991599, 8068.

விஜயதசமி அன்று
பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிநெறிகள் ஆரம்பம்
GIT(G.C.E.A/L), ICT(Grade10,11)
Kids Programming (Year1-10)
Microsoft Office, Hardware
Internet E-mail,
Start on: 21.10.2007
Softview Computer College
55, Arasady Rd, Jaffna.
T.P: 021 2225170

தீபாவளியை முன்னிட்டு
விசேட சலுகைகள்
மீண்டும் எமது வாடிக்கையாளர்களுக்கு
4R - 18/= 10x15 - 110/=
அனைத்து அச்சக வாடிக்கையாளர்களுக்கும்
உங்களுக்குத் தேவையான எந்தவகையான பேப்பரிலோ அல்லது மட்டையிலோ ஒரே நாளில் கலர் பிறின்டிங் செய்து தரப்படும்.
கொனிகா கலர் லாப்
14, ஸ்ரீ வேங்கடேசன் வீதி (பெருமாள் கோயில் அருகில்), யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 3493

சர்வதேச லயன்ஸ் கழக இலங்கைக் கிளையின் (306) பொன்விழா நிகழ்வு
காலம்: 28.10.2007; நேரம்: காலை 10 மணி; இடம் : யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்.
பிரதமவிருந்தினர்:- ஆளுநர் மேதகு லயன் செ.ராகவன் MJF,JP அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
"சேவை தெய்வீகமானது" வடபிராந்திய லயன்ஸ் கழகங்கள். (சி-53382)
SERVICE IS DIVINE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.10.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.